

# திருப்புகழ்


1 கைத்தல நிறைகனி (வயலூர்)....4
2 பக்கரை விசித்ரமணி (விநாயகர்)....4
3 உம்பர் தரு (விநாயகர்)....5
4 நினது திருவடி (விநாயகர்)....5
5 விடமடைசு வேலை (விநாயகர்)....6
6 முத்தைத்தரு (திருவருணை)....6
8 உனைத் தினம் (திருப்பரங்குன்றம்)....7
9 கருவடைந்து (திருப்பரங்குன்றம்)....8
13 சந்ததம் பந்த (திருப்பரங்குன்றம்)....9
28 அறிவழிய மயல்பெருக (திருச்செந்தூர்)....9
31 இயலிசையில் உசித (திருச்செந்தூர்(....9
62 தண்டை அணி (திருச்செந்தூர்)....10
63 தந்த பசிதனை (திருச்செந்தூர்)....10
64 தரிக்குங்கலை (திருச்செந்தூர்)....11
68 தொந்தி சரிய (திருச்செந்தூர்)....11
83 பெருக்கச் சஞ்சலித்து (திருச்செந்தூர்)....12
97 வந்து வந்து முன் (திருச்செந்தூர்)....13
98 வரியார் கருங்கண் (திருச்செந்தூர்)....14
101 விறல்மாரன் ஐந்து (திருச்செந்தூர்)....14
106 அதல விதல (பழநி)....15
107 அபகார நிந்தை (பழநி)....15
110 அவனிதனிலே (பழநி)....16
114 ஆறுமுகம் ஆறுமுகம் (பழநி)....16
134 கருவின் உருவாகி (பழநி)....17
156 சிவனார் மனங்குளிர (பழநி)....17
168 திமிர உததி (பழநி)....18
170 நாத விந்து (பழநி)....18
179 போதகம் தரு (பழநி)....19
182 மனக்கவலை ஏதும் (பழநி)....20
192 வசனமிக ஏற்றி (பழநி)....20

216 சரண கமலாலயத்தில் (சுவாமிமலை) ........ 20
222 நாசர்தங் கடை (சுவாமிமலை) ........ 21
228 பாதி மதிநதி (சுவாமிமலை) ........ 21
240 அரகர சிவன் அரி (திருத்தணிகை) ........ 22
242 இருப்பவல் திருப்புகழ் (திருத்தணிகை) ........ 22
243 இருமலு ரோக (திருத்தணிகை) ........ 23
249 எனக்கென யாவும் (திருத்தணிகை) ........ 23
269 சினத்தவர் முடிக்கும் (திருத்தணிகை) ........ 24
278 நினைத்தது எத்தனை (திருத்தணிகை) ........ 24
303 அதிரும் கழல் (குன்றுதோறாடல்) ........ 25
330 முட்டுப் பட்டு (காஞ்சீபுரம்) ........ 25
401 இருவினை அஞ்ச (திருவருணை) ........ 25
425 செயசெய அருணா (திருவருணை) ........ 26
493 எழுகடல் மணலை (சிதம்பரம்) ........ 27
523 ஒருபதும் இருபதும் (ஸ்ரீ சைலம் திருமலை) ........ 27
525 சரவண பவநிதி (திருவேங்கடம்) ........ 28
557 பகலிரவினில் (சென்னிமலை, திருசிராப்பள்ளி) ........ 28
561 வாசித்து (திருசிராப்பள்ளி) ........ 29
567 பத்தியால் யானுனை (இரத்னகிரி) ........ 29
571 நிராமய புராதன (விராலிமலை) ........ 30
585 அன்பாக வந்து (சென்னிமலை, திருசிராப்பள்ளி) ........ 30
586 பந்து ஆடி அம் கை (திருச்செங்கோடு) ........ 31
598 காலனிடத்து (திருச்செங்கோடு) ........ 31
599 தாமா தாம ஆலாபா (திருச்செங்கோடு) ........ 31
616 ஐங்கரனை (கொங்கணகிரி) ........ 32
636 திருமகள் உலாவும் (கதிர்காமம்) ........ 33
656 அடல் அரி மகவு (வெள்ளிகரம்) ........ 33
675 புவிபுனல் காலும் (திருவாலங்காடு) ........ 34
676 வடிவது நீலம் (திருவாலங்காடு) ........ 34
688 அமரும் அமரர் (திருமயிலை) ........ 35
724 அண்டர்பதி குடியேற (சிறுவை) ........ 35
725 சீதள வாரிஜ (சிறுவை) ........ 36
780 எத்தனை கோடி (வைத்தீசுரன் கோயில்) ........ 36
786 சூலம் என ஓடு (திருக்கடவூர்) ........ 37
798 மருக்குலாவிய (திருவிடைக்கழி) ........ 37
816 கூசாதே பார் (திருவாரூர்) ........ 38
817 கூர்வாய் நாராய் (திருவாரூர்) ........ 38

818 பாலோ தேனோ பாகோ (திருவாரூர்) ..... 39
821 கரமு முளரியின் (திருவாரூர்) ..... 39
835 சந்தனந்திமிர்ந்து (எண்கண்) ..... 40
847 எருவாய் கருவாய் (திருவீழிமிழலை) ..... 41
858 அறுகுநுனி பனி (திருவிடைமருதூர்) ..... 41
904 என்னால் பிறக்கவும் (வயலூர்) ..... 43
925 தசையாகிய (கருவூர்) ..... 43
931 வண்டுபோற் சார (திருவெஞ்சமாக்கூடல்) ..... 44
943 இறவாமற் பிறவாமல் (அவிநாசி) ..... 44
973 சுரும்பு அணி (இலஞ்சி) ..... 44
974 மாலையில் வந்து (இலஞ்சி) ..... 45
998 நாலிரண்டிதழாலே (பொதுப்பாடல்கள்) ..... 46
1002 கடலை பயறொடு (பொதுப்பாடல்கள்( ..... 46
1015 விடம் என அயில் (பொதுப்பாடல்கள்) ..... 47
1028 காதி மோதி (பொதுப்பாடல்கள்) ..... 48
1040 நாராலே தோல் (பொதுப்பாடல்கள்) ..... 48
1041 மாதா வோடே (பொதுப்பாடல்கள்) ..... 48
1045 அமல வாயு (பொதுப்பாடல்கள்) ..... 49
1053 அதல சேடனாராட (பொதுப்பாடல்கள்) ..... 49
1177 புகரில் சேவல (பொதுப்பாடல்கள்) ..... 50
1250 தீ ஊதை தாத்ரி (பொதுப்பாடல்கள்) ..... 51
1291 துள்ளு மதவேள் (பொதுப்பாடல்கள்) ..... 51
1297 பட்டுப் படாத (பொதுப்பாடல்கள்) ..... 51
1306 கும்பகோணம் (க்ஷேத்திரக் கோவை) ..... 52
1307 அகரமுமாகி (பழமுதிர்ச்சோலை) ..... 52
1315 சீர் சிறக்கும் மேனி (பழமுதிர்ச்சோலை) ..... 53
1318 வாதினை அடர்ந்த (பழமுதிர்ச்சோலை) ..... 54
வேல் விருத்தம் 10 - வலாரியல லாகுலமி ..... 54
1328 மங்களம் (திருவருணை)ஏறுமயில் ஏறி - ..... 55

## 1 கைத்தல நிறைகனி (வயலூர்)

**தத்தன தனதன தத்தன தனதன**
**தத்தன தனதன தனதான ......**
**கான்கார்டு குமாரா கான்கார்டு குமாரா கான்கார்டு குமாரா சரணம்**
**கான்கார்டு குமாரா கான்கார்டு குமாரா கான்கார்டு குமாரா சரணம்**
https://www.youtube.com/watch?v=UVegYmVb2m4

**கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி**
**கப்பிய கரிமுக ...... னடிபேணிக்**
**கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ**
**கற்பக மெனவினை ...... கடிதேகும்**
**மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்**
**மற்பொரு திரள்புய ...... மதயானை**
**மத்தள வயிறனை உத்தமி புதல்வனை**
**மட்டவிழ் மலர்கொடு ...... பணிவேனே**
**முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்**
**முற்பட எழுதிய ...... முதல்வோனே**
**முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்**
**அச்சது பொடிசெய்த ...... அதிதீரா**
**அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்**
**அப்புன மதனிடை ...... இபமாகி**
**அக்குற மகளுட னச்சிறு முருகனை**
**அக்கண மணமருள் ...... பெருமாளே.**

## 2 பக்கரை விசித்ரமணி (விநாயகர்)

**தத்ததன தத்ததன தத்ததன தத்ததன**
**தத்ததன தத்ததன தனதான ......**
**வித்தகம ருப்புடைய ...... பெருமாளே**
**செப்பெனஎ னக்கருள் கை ...... மறவேனே**
https://www.youtube.com/watch?v=fdZIujNxL14

**பக்கரை வி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை**
**பட்சியெனு முக்ரதுர ...... கமுநீபப்**
**பக்குவ ம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய**
**பட்டுருவ விட்டருள்கை ...... வடிவேலும்**
**திக்கதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு**
**சிற்றடியு முற்றியப ...... னிருதோளும்**
**செய்ப்பதியும் வைத்துயர் தி ருப்புகழ்வி ருப்பமொடு**
**செப்பெனஎ னக்கருள் கை ...... மறவேனே**
**இக்கவரை நற்கனிகள் சர்க்கரை ப ருப்புடனெய்**
**எட்பொரி ய வற் றுவரை ...... இளநீர்வண்**
**டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டு வெள**

ரிப்பழமி டிப்பல் வகை ...... தனிமூலம்
மிக்கஅடி சிற்கடலை பட்சணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனும் ...... அருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய ...... பெருமாளே.

## 3 உம்பர் தரு (விநாயகர்)

தந்ததனத் தானதனத் தனதான ......
தந்ததனத் தானதனத் தனதான ......
கணபதியே நீ வந்திடுவாய் குண நிதியே அருள் தந்திடுவாய்
கணபதியே நீ வந்திடுவாய் குண நிதியே அருள் தந்திடுவாய்
https://www.youtube.com/watch?v=OEnGCMLCskM

உம்பர்தருத் தேநுமணிக் ...... கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் ...... துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் ...... பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் ...... றருள்வாயே
தம்பிதனக் காகவனத் ...... தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் ...... கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் ...... பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் ...... பெருமாளே.

## 4 நினது திருவடி (விநாயகர்)

தனன தனதன தத்தன தத்தன
தனன தனதன தத்தன தத்தன
தனன தனதன தத்தன தத்தன தனதான ......

நினது திருவடி சத்திம யிற்கொடி
நினைவு கருதிடு புத்திகொ டுத்திட
நிறைய அமுதுசெய் முப்பழ மப்பமு ...... நிகழ்பால்தேன்
நெடிய வளைமுறி இக்கொடு லட்டுகம்
நிறவில் அரிசிப ருப்பவல் எட்பொரி
நிகரில் இனிகத லிக்கனி வர்க்கமும் ...... இளநீரும்
மனது மகிழ்வொடு தொட்டக ரத்தொரு
மகர சலநிதி வைத்தது திக்கர
வளரு கரிமுக ஒற்றைம ருப்பனை ...... வலமாக
மருவு மலர்புனை தொத்திர சொற்கொடு
வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு
வனச பரிபுர பொற்பத அர்ச்சனை ...... மறவேனே
தென்ன தெனதென தெத்தென னப்பல
சிறிய அறுபத மொய்த்துதி ரப்புனல்
திரளும் உறுசதை பித்தநி ணக்குடல் ...... செறிமூளை

செரும உதரநி ரப்புசெ ருக்குடல்
நிரைய அரவநி றைத்தக ளத்திடை
திமித திமிதிமி மத்தளி டக்கைகள் ...... செகசேசே
எனவெ துகுதுகு துத்தென ஒத்துகள்
துடிகள் இடிமிக ஒத்துமு ழக்கிட
டிமுட டிமுடிமு டிட்டிமெ னத்தவில் ...... எழுமோசை
இகலி அலகைகள் கைப்பறை கொட்டிட
இரண பயிரவி சுற்றுந டித்திட
எதிரு நிசிசர ரைப்பெலி யிட்டருள் ...... பெருமாளே.

## 5 விடமடைசு வேலை (விநாயகர்)

தனதனன தான தனதனன தான
தனதனன தான ...... தனதான

விடமடைசு வேலை அமரர்படை சூலம்
விசையன்விடு பாண ...... மெனவேதான்
விழியுமதி பார விதமுமுடை மாதர்
வினையின்விளை வேதும் ...... அறியாதே
கடியுலவு பாயல் பகலிரவெ னாது
கலவிதனில் மூழ்கி ...... வறிதாய
கயவனறி வீனன் இவனுமுயர் நீடு
கழலிணைகள் சேர ...... அருள்வாயே
இடையர்சிறு பாலை திருடிகொடு போக
இறைவன்மகள் வாய்மை ...... அறியாதே
இதயமிக வாடி யுடையபிளை நாத
கணபதியெ னாம ...... முறைகூற
அடையலவர் ஆவி வெருவஅடி கூர
அசலுமறி யாமல் ...... அவரோட
அகல்வதென டாசொல் எனவுமுடி சாட
அறிவருளும் ஆனை ...... முகவோனே.

## 6 முத்தைத்தரு (திருவருணை)

தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன தனதான ......

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ...... எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்

முப்பத்துமு வர்க்கத் தமரரும் ...... அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் ...... இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ...... ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு ...... கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ...... எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ...... முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல ...... பெருமாளே.

## 8 உனைத் தினம் (திருப்பரங்குன்றம்)

தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன தனதான ......

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடுன் அடியிணை
உறப்ப ணிந்திலன் ஒருதவ மிலனுன ...... தருள்மாறா
உளத்து ளன்பினர் உறைவிடம் அறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன் ...... மலைபோலே
கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலிதன் உழையினர்
கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு ...... பொருபோதே
கலக்கு றுஞ்செயல் ஒழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தில் என்பய மறமயில் முதுகினில் ...... வருவாயே
வினைத்த லந்தனில் அலகைகள் குதிகொள
விழுக்கு டைந்துமெய் உகுதசை கழுகுண

விரித்த குஞ்சியர் எனுமவு ணரைஅமர் ...... புரிவேலா
மிகுத்த பண்பயில் குயில்மொழி அழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை ...... உடையோனே
தினத்தி னஞ்சதுர் மறைமுநி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதியவி ணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுநி வரர்தொழ ...... மகிழ்வோனே
தெனத்தெ னந்தன எனவரி யளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
திருப் பரங்கிரி தனிலுறை சரவண ...... பெருமாளே.

## 9 கருவடைந்து (திருப்பரங்குன்றம்)

தனனதந்த தத்தத்த தந்த
தனனதந்த தத்தத்த தந்த
தனனதந்த தத்தத்த தந்த தனதான ......

கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப்ப யின்று
கடையில்வந்து தித்துக்கு ழந்தை ...... வடிவாகிக்
கழுவியங்கெ டுத்துச்சு ரந்த
முலையருந்து விக்கக்கி டந்து
கதறியங்கை கொட்டித்த வழ்ந்து ...... நடமாடி
அரைவடங்கள் கட்டிச்ச தங்கை
இடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
அவையணிந்து முற்றிக்கி ளர்ந்து ...... வயதேறி
அரியபெண்கள் நட்பைப்பு ணர்ந்து
பிணியுழன்று சுற்றித்தி ரிந்த
தமையுமுன்க்ரு பைச்சித்தம் என்று ...... பெறுவேனோ
இரவிஇந்த்ரன் வெற்றிக்கு ரங்கி
னரசரென்றும் ஒப்பற்ற உந்தி
யிறைவன்எண்கி னக்கர்த்த னென்றும் ...... நெடுநீலன்
எரியதென்றும் ருத்ரற்சி றந்த
அநுமனென்றும் ஒப்பற்ற அண்டர்
எவரும்இந்த வர்க்கத்தில் வந்து ...... புனமேவ
அரியதன்ப டைக்கர்த்த ரென்று
அசுரர்தங்கி ளைக்கட்டை வென்ற
அரிமுகுந்தன் மெச்சுற்ற பண்பின் ...... மருகோனே
அயனையும்பு டைத்துச்சி னந்து
உலகமும்ப டைத்துப்ப ரிந்து

அருள்பரங்கி ரிக்குட்சி றந்த ...... பெருமாளே.

## 13 சந்ததம் பந்த (திருப்பரங்குன்றம்)

**தந்தனந் தந்தத் தனதான ......**
**தந்தனந் தந்தத் தனதான ......**
**வா வா முருகா வடிவேலா வள்ளி மணாளா வடிவேலா**
**வா வா முருகா வடிவேலா வள்ளி மணாளா வடிவேலா**
https://www.youtube.com/watch?v=IEwYBIXZyV0

**சந்ததம் பந்தத் ...... தொடராலே**
**சஞ்சலந் துஞ்சித் ...... திரியாதே**
**கந்தனென் றென்றுற் ...... றுனைநாளும்**
**கண்டுகொண் டன்புற் ...... றிடுவேனோ**
**தந்தியின் கொம்பைப் ...... புணர்வோனே**
**சங்கரன் பங்கிற் ...... சிவைபாலா**
**செந்திலங் கண்டிக் ...... கதிர்வேலா**
**தென்பரங் குன்றிற் ...... பெருமாளே.**

## 28 அறிவழிய மயல்பெருக (திருச்செந்தூர்)

**தனதனன தனதனன தனதனன தனதனன**
**தனதனன தனதனன தனதானா ......**

**அறிவழிய மயல்பெருக வுரையுமற விழிசுழல**
**அனலவிய மலமொழுக ...... அகலாதே**
**அனையுமனை யருகிலுற வெருவியழ வுறவுமழ**
**அழலினிகர் மறலியெனை ...... யழையாதே**
**செறியுமிரு வினைகரண மருவுபுல னொழியவுயர்**
**திருவடியி லணுகவர ...... மருள்வாயே**
**சிவனைநிகர் பொதியவரை முநிவனக மகிழஇரு**
**செவிகுளிர இனியதமிழ் ...... பகர்வோனே**
**நெறிதவறி யலரிமதி நடுவன்மக பதிமுளரி**
**நிருதிநிதி பதிகரிய ...... வனமாலி**
**நிலவுமறை யவனிவர்க ளலையஅர சுரிமைபுரி**
**நிருதனுர மறஅயிலை ...... விடுவோனே**
**மறிபரசு கரமிலகு பரமனுமை யிருவிழியு**
**மகிழமடி மிசைவளரு ...... மிளையோனே**
**மதலைதவ ழுததியிடை வருதரள மணிபுளின**
**மறையவுயர் கரையிலுறை ...... பெருமாளே.**

## 31 இயலிசையில் உசித (திருச்செந்தூர்(

**தனதனன தனன தந்தத் தனதான ......**
**தனதனன தனன தந்தத் தனதான ......**
**வேல் முருகா வேல் முருகா வேல் முருகா வேல்**
**வேல் முருகா வேல் முருகா வேல் முருகா வேல்**

https://www.youtube.com/watch?v=8mSPITSQt6o

**இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி ......**
**இரவுபகல் மனது சிந்தித் துழலாதே ......**
**உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி ......**
**உனையெனது ளறியு மன்பைத் தருவாயே ......**
**மயில்தகர்க லிடைய ரந்தத் தினைகாவல் ......**
**வனசகுற மகளை வந்தித் தணைவோனே ......**
**கயிலைமலை யனைய செந்திற் பதிவாழ்வே ......**
**கரிமுகவ னிளைய கந்தப் .பெருமாளே ......**

## 62 தண்டை அணி (திருச்செந்தூர்)

தந்ததன தந்தனந் தந்தததன தந்தனந்
தந்ததன தந்தனந் தந்ததானா ......

**தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்**
**தண்கழல்சி லம்புடன் ...... கொஞ்சவேநின்**
**தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்**
**சந்தொடம ணைந்துநின் ...... றன்புபோலக்**
**கண்டுறக டம்புடன் சந்தமகு டங்களுங்**
**கஞ்சமலர் செங்கையுஞ் ...... சிந்துவேலும்**
**கண்களுமு கங்களுஞ் சந்திரநி றங்களுங்**
**கண்குளிர என்றன்முன் ...... சந்தியாவோ**
**புண்டரிகர் அண்டமுங் கொண்டபகி ரண்டமும்**
**பொங்கியெழ வெங்களங் ...... கொண்டபோது**
**பொன்கிரியெ னஞ்சிறந் தெங்கினும்வ ளர்ந்துமுன்**
**புண்டரிகர் தந்தையுஞ் ...... சிந்தைகூரக்**
**கொண்டநட னம்பதஞ் செந்திலிலும் என்றன்முன்**
**கொஞ்சிநட னங்கொளுங் ...... கந்தவேளே**
**கொங்கைகுற மங்கையின் சந்தமணம் உண்டிடுங்**
**கும்பமுநி கும்பிடுந் ...... தம்பிரானே.**

## 63 தந்த பசிதனை (திருச்செந்தூர்)

தந்த தனதனன தந்த தனதனன
தந்த தனதனன தனதானா ......
https://www.youtube.com/watch?v=gmpeXE_xQvg

**தந்த பசிதனைய றிந்து முலையமுது**
**தந்து முதுகுதட ...... வியதாயார்**
**தம்பி பணிவிடைசெய் தொண்டர் பிரியமுள**
**தங்கை மருகருயி ...... ரெனவேசார்**
**மைந்தர் மனைவியர்க டும்பு கடனுதவு**
**மந்த வரிசைமொழி ...... பகர்கேடா**

வந்து தலைநவிர விழ்ந்து தரைபுகம
யங்க வொருமகிட ...... மிசையேறி
அந்த கனுமெனைய டர்ந்து வருகையினி
லஞ்ச லெனவலிய ...... மயில்மேல்நீ
அந்த மறலியொடு கந்த மனிதனம
தன்ப னெனமொழிய ...... வருவாயே
சிந்தை மகிழமலை மங்கை நகிலிணைகள்
சிந்து பயமயிலு ...... மயில்வீரா
திங்க ளரவுநதி துன்று சடிலரருள்
செந்தி னகரிலுறை ...... பெருமாளே.

## 64 தரிக்குங்கலை (திருச்செந்தூர்)

தனத்தந்தன தனத்தந்தன
தனத்தந்தன தனதானத் ......

தரிக்குங்கலை நெகிழ்க்கும்பர
தவிக்குங்கொடி ...... மதனேவிற்
றகைக்குந்தனி திகைக்குஞ்சிறு
தமிழ்த்தென்றலி ...... னுடனேநின்
றெரிக்கும்பிறை யெனப்புண்படு
மெனப்புன்கவி ...... சிலபாடி
இருக்குஞ்சிலர் திருச்செந்திலை
யுரைத்துய்ந்திட ...... அறியாரே
அரிக்குஞ்சதுர் மறைக்கும்பிர
மனுக்குந்தெரி ...... வரிதான
அடிச்செஞ்சடை முடிக்கொண்டிடு
மரற்கும்புரி ...... தவபாரக்
கிரிக்கும்பநன் முநிக்குங்க்ருபை
வரிக்குங்குரு ...... பரவாழ்வே
கிளைக்குந்திற லரக்கன்கிளை
கெடக்கன்றிய ...... பெருமாளே.

## 68 தொந்தி சரிய (திருச்செந்தூர்)

தந்த தனன தனனா தனனதன
தந்த தனன தனனா தனனதன
தந்த தனன தனனா தனனதன தனதான ......

தொந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர் ...... நகையாடி
தொண்டு கிழவ னிவனா ரெனஇருமல்

கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு ...... செவியாகி
வந்த பிணியு மதிலே மிடையுமொரு
பண்டி தனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுக ...... துயர்மேவி
மங்கை யழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே யொழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை ...... வரவேணும்
எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே யினிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக ...... அபிராம
இங்கு வருக அரசே வருகமுலை
யுண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல ...... வருமாயன்
சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய ...... அடுதீரா
திங்க ளரவு நதிசூ டியபரமர்
தந்த குமர அலையே கரைபொருத
செந்தி னகரி லினிதே மருவிவளர் ...... பெருமாளே.

## 83 பெருக்கச் சஞ்சலித்து (திருச்செந்தூர்)

தனத்தத்தந் தனத்தத்தந்
தனத்தத்தந் தனத்தத்தந்
தனத்தத்தந் தனத்தத்தந் தனதான ......

பெருக்கச்சஞ் சலித்துக்கந்
தலுற்றுப்புந் தியற்றுப்பின்
பிழைப்பற்றுங் குறைப்புற்றும் ...... பொதுமாதர்
ப்ரியப்பட்டங் கழைத்துத்தங்
கலைக்குட்டங் கிடப்பட்சம்
பிணித்துத்தந் தனத்தைத்தந் ...... தணையாதே
புரக்கைக்குன் பதத்தைத்தந்
தெனக்குத்தொண் டுறப்பற்றும்
புலத்துக்கண் செழிக்கச்செந் ...... தமிழ்பாடும்
புலப்பட்டங் கொடுத்தற்கும்
கருத்திற்கண் படக்கிட்டும்
புகழ்ச்சிக்குங் க்ருபைச்சித்தம் ...... புரிவாயே
தருக்கிக்கண் களிக்கத்தெண்

டனிட்டுத்தண் புனத்திற்செங்
குறத்திக்கன் புறச்சித்தந் ...... தளர்வோனே
சலிப்புற்றங் குரத்திற்சம்
ப்ரமித்துக்கொண் டலைத்துத்தன்
சமர்த்திற்சங் கரிக்கத்தண் ...... டியசூரன்
சிரத்தைச்சென் றறுத்துப்பந்
தடித்துத்திண் குவட்டைக்கண்
டிடித்துச்செந் திலிற்புக்கங் ...... குறைவோனே
சிறக்கற்கஞ் செழுத்தத்தந்
திருச்சிற்றம் பலத்தத்தன்
செவிக்குப்பண் புறச்செப்பும் ...... பெருமாளே.

## 97 வந்து வந்து முன் (திருச்செந்தூர்)

தந்த தந்த தந்த தந்த
தந்த தந்த தந்த தந்த
தந்த தந்த தந்த தந்த தனதான ......

வந்து வந்து முன்த வழ்ந்து
வெஞ்சு கந்த யங்க நின்று
மொஞ்சி மொஞ்சி யென்ற ழுங்கு ...... ழந்தையோடு
மண்ட லங்கு லுங்க அண்டர்
விண்ட லம்பி ளந்தெ ழுந்த
செம்பொன் மண்ட பங்க ளும்ப ...... யின்றவீடு
கொந்த ளைந்த குந்த ளந்த
ழைந்து குங்கு மந்த யங்கு
கொங்கை வஞ்சி தஞ்ச மென்று ...... மங்குகாலம்
கொங்க டம்பு கொங்கு பொங்கு
பைங்க டம்பு தண்டை கொஞ்சு
செஞ்ச தங்கை தங்கு பங்க ...... யங்கள்தாராய்
சந்த டர்ந்தெ ழுந்த ரும்பு
மந்த ரஞ்செ ழுங்க ரும்பு
கந்த ரம்பை செண்ப தங்கொள் ...... செந்தில்வாழ்வே
தண்க டங்க டந்து சென்று
பண்க டங்க டர்ந்த இன்சொல்
திண்பு னம்பு குந்து கண்டி ...... றைஞ்சுகோவே
அந்த கன்க லங்க வந்த
கந்த ரங்க லந்த சிந்து
ரஞ்சி றந்து வந்த லம்பு ...... ரிந்தமார்பா
அம்பு னம்பு குந்த நண்பர்

சம்பு நன்பு ரந்த ரன்த
ரம்ப லும்பர் கும்பர் நம்பு ...... தம்பிரானே.

## 98 வரியார் கருங்கண் (திருச்செந்தூர்)

தனனா தனந்த ...... தனதான
வா வா முருகா வடிவேலா வள்ளி மணாளா வடிவேலா
வா வா முருகா வடிவேலா வள்ளி மணாளா வடிவேலா

வரியார் கருங்கண் ...... மடமாதர்
மகவா சைதொந்த ...... மதுவாகி
இருபோ துநைந்து ...... மெலியாதே
இருதா ளினன்பு ...... தருவாயே
பரிபா லனஞ்செய் ...... தருள்வோனே
பரமே சுரன்ற ...... னருள்பாலா
அரிகே சவன்றன் ...... மருகோனே
அலைவா யமர்ந்த ...... பெருமாளே.

## 101 விறல்மாரன் ஐந்து (திருச்செந்தூர்)

தனதான தந்த தனதான தந்த
தனதான தந்த ...... தனதான

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து ...... வெயில்காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் ...... வசைகூற
குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப ...... மயல்தீர
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து ...... குறுகாயோ
மறிமானு கந்த இறையோன்ம கிழ்ந்து
வழிபாடு தந்த ...... மதியாளா
மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவேலெ றிந்த ...... அதிதீரா
அறிவால றிந்து னிருதாளி றைஞ்சு
மடியாரி டைஞ்சல் ...... களைவோனே
அழகான செம்பொன் மயில்மேல மர்ந்து
அலைவாயு கந்த ...... பெருமாளே.

## 106 அதல விதல (பழநி)

தனன தனதனன தந்தத்த தந்ததன
தனன தனதனன தந்தத்த தந்ததன
தனன தனதனன தந்தத்த தந்ததன தந்ததான ......

அதல விதலமுத லந்தத்த லங்களென
அவனி யெனஅமரர் அண்டத்த கண்டமென
அகில சலதியென எண்டிக்குள் விண்டுவென ...... அங்கிபாநு
அமுத கதிர்களென அந்தித்த மந்த்ரமென
அறையு மறையெனஅ ருந்தத்து வங்களென
அணுவி லணுவெனநி றைந்திட்டு நின்றதொரு ...... சம்ப்ரதாயம்
உதய மெழஇருள்வி டிந்தக்க ணந்தனிலி
ருதய கமலமுகி ழங்கட்ட விழ்ந்துணர்வி
லுணரு மநுபவம னம்பெற்றி டும்படியை ...... வந்துநீமுன்
உதவ இயலினியல் செஞ்சொற்ப்ர பந்தமென
மதுர கவிகளில்ம னம்பற்றி ருந்துபுகழ்
உரிய அடிமையுனை யன்றிப்ப்ர பஞ்சமதை ...... நம்புவேனோ
ததத தததததத தந்தத்த தந்ததத
திதிதி திதிதிதிதி திந்தித்தி திந்திதிதி
தகுகு தகுதகுகு தந்தத்த தந்தகுகு ...... திந்திதோதி
சகக சககெணக தந்தத்த குங்கெணக
டிடிடி டிடிடிடிடி டிண்டிட்டி டிண்டிடிடி
தகக தகதகக தந்தத்த தந்தகக ...... என்றுதாளம்
பதலை திமிலைதுடி தம்பட்ட மும்பெருக
அகில நிசிசரர்ந டுங்கக்கொ டுங்கழுகு
பரிய குடர்பழுவெ லும்பைப்பி டுங்கரண ...... துங்ககாளி
பவுரி யிடநரிபு லம்பப்ப ருந்திறகு
கவரி யிடஇகலை வென்றுச்சி கண்டிதனில்
பழநி மலையின்மிசை வந்துற்ற இந்திரர்கள் ...... தம்பிரானே.

## 107 அபகார நிந்தை (பழநி)

தனதான தந்தனத் ...... தனதான
தனதான தந்தனத் ...... தனதான

முருகா முருகா வேல் முருகா; முருகா முருகா வேல் முருகா
https://www.youtube.com/watch?v=t5XUytvKYao

அபகார நிந்தைபட் ...... டுழலாதே
அறியாத வஞ்சரைக் ...... குறியாதே
உபதேச மந்திரப் ...... பொருளாலே
உனைநானி னைந்தருட் ...... பெறுவேனோ
இபமாமு கன்தனக் ...... கிளையோனே

இமவான்ம டந்தையுத் ...... தமிபாலா
ஜெபமாலை தந்தசற் ...... குருநாதா
திருவாவி னன்குடிப் ...... பெருமாளே.

## 110 அவனிதனிலே (பழநி)

தனதனன தான தந்த தனதனன தான தந்த
தனதனன தான தந்த தனதான ......

அவனிதனி லேபி றந்து மதலையென வேத வழ்ந்து
அழகுபெற வேந டந்து ...... இளைஞோனாய்
அருமழலை யேமி குந்து குதலைமொழி யேபு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து ...... பதினாறாய்
சிவகலைக ளாக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநி னைந்து ...... துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை யுன்ற ...... னடிசேராய்
மவுனவுப தேச சம்பு மதியறுகு வேணி தும்பை
மணிமுடியின் மீத ணிந்த ...... மகதேவர்
மனமகிழ வேய ணைந்து ஒருபுறம தாக வந்த
மலைமகள்கு மார துங்க ...... வடிவேலா
பவனிவர வேயு கந்து மயிலின்மிசை யேதி கழ்ந்து
படியதிர வேந டந்த ...... கழல்வீரா
பரமபத மேசெ றிந்த முருகனென வேயு கந்து
பழநிமலை மேல மர்ந்த ...... பெருமாளே.

## 114 ஆறுமுகம் ஆறுமுகம் (பழநி)

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தந்ததான ......

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் ...... என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய ...... தென்றுநாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணாஎனது
ஈசஎன மானமுன ...... தென்றுமோதும்
ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னாவிலுனை
யேவர்புகழ் வார்மறையு ...... மென்சொலாதோ
நீறுபடு மாழைபொரு மேனியவ வேலஅணி
நீலமயில் வாகவுமை ...... தந்தவேளே
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும ...... டங்கல்வேலா

சீறிவரு மாறவுண னாவியுணு மானைமுக
தேவர்துணை வாசிகரி ...... அண்டகூடஞ்
சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக ...... தம்பிரானே.

## 134 கருவின் உருவாகி (பழநி)

தனதனன தான தந்த தனதனன தான தந்த
தனதனன தான தந்ததனதான ......

கருவினுரு வாகி வந்து வயதளவி லேவ ளர்ந்து
கலைகள்பல வேதெ ரிந்து ...... மதனாலே
கரியகுழல் மாதர் தங்க ளடிசுவடு மார்பு தைந்து
கவலைபெரி தாகி நொந்து ...... மிகவாடி
அரகரசி வாய வென்று தினமுநினை யாமல் நின்று
அறுசமய நீதி யொன்று ...... மறியாமல்
அசனமிடு வார்கள் தங்கள் மனைகள்தலை வாசல் நின்று
அநுதினமு நாண மின்றி ...... யழிவேனோ
உரகபட மேல்வ ளர்ந்த பெரியபெரு மாள ரங்கர்
உலகளவு மால்ம கிழ்ந்த ...... மருகோனே
உபயகுல தீப துங்க விருதுகவி ராஜ சிங்க
உறைபுகலி யூரி லன்று ...... வருவோனே
பரவைமனை மீதி லன்று ஒருபொழுது தூது சென்ற
பரமனரு ளால்வ ளர்ந்த ...... குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர்சிறை மீள வென்று
பழநிமலை மீதில் நின்ற ...... பெருமாளே.

## 156 சிவனார் மனங்குளிர (பழநி)

தனனா தனந்ததன தனனா தனந்ததன
தனனா தனந்ததன ...... தனதான

சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி லும்பகர்செய் ...... குருநாதா
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலேவி ரும்பியுளம் ...... நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலு
மடியேனை அஞ்சலென ...... வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது ...... புரிவாயே
நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் ...... மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத

நலமான விஞ்சைகரு ...... விளைகோவே
தெவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் ...... வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் ...... பெருமாளே.

## 168 திமிர உததி (பழநி)

தனன தனன தனன தனன
தனன தனன ...... தனதான
வேல் முருகா வேல் வேல்; வேல் முருகா வேல் வேல்
வேல் முருகா வேல் வேல்; வேல் முருகா வேல் வேல்
https://www.youtube.com/watch?v=vPl90fhMADk

திமிர வுததி யனைய நரக செனன மதனில் விடுவாயேல்
செவிடு குருடு வடிவு குறைவு சிறிது மிடியு மணுகாதே
அமரர் வடிவு மதிக குலமு மறிவு நிறையும் வரவேநின்
அருள தருளி யெனையு மனதொ டடிமை கொளவும் வரவேணும்
சமர முகவெ லசுரர் தலைக ளுருள மிகவேநீள்
சலதி யலற நெடிய பதலை தகர அயிலை விடுவோனே
வெமர வணையி லினிது துயிலும் விழிகள் நளினன் மருகோனே
மிடறு கரியர் குமர பழநி விரவு மமரர் பெருமாளே.

## 170 நாத விந்து (பழநி)

தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன தனதான ......

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ◌ாமீ நமோநம ...... வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம ...... பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம ...... கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம ...... அருள்தாராய்
ஈத லும்பல கோலா லபூஜையும்
ஓத லுங்குண ஆசா ரநீதியும்
ஈர முங்குரு சீர்பா தசேவையு ...... மறவாத

ஏழ்த லம்புகழ் காவே ரியால்விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெம்பிர நாடா ளுநாயக ...... வயலூரா
ஆத ரம்பயி லாரூ ரர்தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதே றிமாகயி ...... லையிலேகி
ஆதி யந்தவு லாவா சுபாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவி னன்குடி வாழ்வா னதேவர்கள் ...... பெருமாளே.

## 179 போதகம் தரு (பழநி)

தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன ...... தனதான

போத கந்தரு கோவே நமோநம
நீதி தங்கிய தேவா நமோநம
பூத லந்தனை யாள்வாய் நமோநம ...... பணியாவும்
பூணு கின்றபி ரானே நமோநம
வேடர் தங்கொடி மாலா நமோநம
போத வன்புகழ் சாமீ நமோநம ...... அரிதான
வேத மந்திர ரூபா நமோநம
ஞான பண்டித நாதா நமோநம
வீர கண்டைகொள் தாளா நமோநம ...... அழகான
மேனி தங்கிய வேளே நமோநம
வான பைந்தொடி வாழ்வே நமோநம
வீறு கொண்டவி சாகா நமோநம ...... அருள்தாராய்
பாத கஞ்செறி சூரா திமாளவெ
கூர்மை கொண்டயி லாலே பொராடியெ
பார அண்டர்கள் வானா டுசேர்தர ...... அருள்வோனே
பாதி சந்திர னேசூ டும்வேணியர்
சூல சங்கர னார்கீ தநாயகர்
பார திண்புய மேசே ருசோதியர் ...... கயிலாயர்
ஆதி சங்கர னார்பா கமாதுமை
கோல அம்பிகை மாதா மநோமணி
ஆயி சுந்தரி தாயா னநாரணி ...... அபிராமி
ஆவல் கொண்டுவி றாலே சிராடவெ
கோம ளம்பல சூழ்கோ யில்மீறிய
ஆவி னன்குடி வாழ்வா னதேவர்கள் ...... பெருமாளே.

## 182 மனக்கவலை ஏதும் (பழநி)

தனத்ததன தான தந்த தனத்ததன தான தந்த
தனத்ததன தான தந்த ...... தனதான

**மனக்கவலை யேது மின்றி உனக்கடிமை யேபு ரிந்து**
**வகைக்குமநு நூல்வி தங்கள் ...... தவறாதே**
**வகைப்படிம னோரத தங்கள் தொகைப்படியி னாலி லங்கி**
**மயக்கமற வேத முங்கொள் ...... பொருள்நாடி**
**வினைக்குரிய பாத கங்கள் துகைத்துவகை யால்நி னைந்து**
**மிகுத்தபொரு ளாக மங்கள் ...... முறையாலே**
**வெகுட்சிதனை யேது ரந்து களிப்பினுட னேந டந்து**
**மிகுக்குமுனை யேவ ணங்க ...... வரவேணும்**
**மனத்தில்வரு வோனெ என்று னடைக்கலம தாக வந்து**
**மலர்ப்பதம தேப ணிந்த ...... முநிவோர்கள்**
**வரர்க்குமிமை யோர்க ளென்பர் தமக்குமன மேயி ரங்கி**
**மருட்டிவரு சூரை வென்ற ...... முனைவேலா**
**தினைப்புனமு னேந டந்து குறக்கொடியை யேம ணந்து**
**செகத்தைமுழு தாள வந்த ...... பெரியோனே**
**செழித்தவள மேசி றந்த மலர்ப்பொழில்க ளேநி றைந்த**
**திருப்பழநி வாழ வந்த ...... பெருமாளே.**

## 192 வசனமிக ஏற்றி (பழநி)

தனதனன தாத்த ...... தனதான
தனதனன தாத்த ...... தனதான

**வசனமிக வேற்றி ...... மறவாதே**
**மனதுதுய ராற்றி ...... லுழலாதே**
**இசைபயில்ஷ டாக்ஷ ...... ரமதாலே**
**இகபரசெள பாக்ய ...... மருள்வாயே**
**பசுபதிசி வாக்ய ...... முணர்வோனே**
**பழநிமலை வீற்ற ...... ருளும்வேலா**
**அசுரர்கிளை வாட்டி ...... மிகவாழ**
**அமரர்சிறை மீட்ட ...... பெருமாளே.**

## 216 சரண கமலாலயத்தில் (சுவாமிமலை)

தனதனன தான தத்த தனதனன தான தத்த
தனதனன தான தத்த தனதான ......
வேல் முருகா வேல் வேல்; வேல் முருகா வேல் வேல்
வேல் முருகா வேல் வேல்; வேல் முருகா வேல் வேல்
https://www.youtube.com/watch?v=TiNfX8maAWI

**சரணகம லால யத்தை அரைநிமிஷ நேர மட்டில்**
**தவமுறைதி யானம் வைக்க ...... அறியாத**

சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
தமியன்மிடி யால்ம யக்க ...... முறுவேனோ
கருணைபுரி யாதி ருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற ...... குமரோனே
கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலே செச்சை
கமழுமண மார்க டப்ப ...... மணிவோனே
தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகலசெல்வ யோக மிக்க ...... பெருவாழ்வு
தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீகொ டுத்து
தவிபுரிய வேணு நெய்த்த ...... வடிவேலா
அருணதள பாத பத்ம மதுநிதமு மேது திக்க
அரியதமிழ் தான ளித்த ...... மயில்வீரா
அதிசயம நேக முற்ற பழநிமலை மீது தித்த
அழகதிரு வேர கத்தின் ...... முருகோனே.

## 222 நாசர்தங் கடை (சுவாமிமலை)

தானனந் தனதனன தனதனா தத்த தந்த ...... தனதான
தானனந் தனதனன தனதனா தத்த தந்த ...... தனதான

நாசர்தங் கடையதனில் விரவிநான் மெத்த நொந்து ...... தடுமாறி
ஞானமுங் கெடஅடைய வழுவியா ழத்த முந்தி ...... மெலியாதே
மாசகந் தொழுமுனது புகழினோர் சொற்ப கர்ந்து ...... சுகமேவி
மாமணங் கமழுமிரு கமலபா தத்தை நின்று ...... பணிவேனோ
வாசகம் புகலவொரு பரமர்தா மெச்சு கின்ற ...... குருநாதா
வாசவன் தருதிருவை யொருதெய்வா னைக்கி ரங்கு ...... மணவாளா
கீசகஞ் சுரர்தருவு மகிழுமா வத்தி சந்து ...... புடைசூழுங்
கேசவன் பரவுகுரு மலையில்யோ கத்த மர்ந்த ...... பெருமாளே.

## 228 பாதி மதிநதி (சுவாமிமலை)

தான தனதன தான தனதன
தான தனதன தனதான ......

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய ...... குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய ...... மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
மாய னரிதிரு ...... மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட ...... அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு ...... சிறைமீளா

**ஆடு மயிலினி லேறி யமரர்கள்**
**சூழ வரவரு ...... மிளையோனே**
**சூத மிகவளர் சோலை மருவுசு**
**வாமி மலைதனி ...... லுறைவோனே**
**சூர னுடலற வாரி சுவறிட**
**வேலை விடவல ...... பெருமாளே.**

## 240 அரகர சிவன் அரி (திருத்தணிகை)

**தனதன தனதன தனதன தனதன**
**தனதன தனதன தனதான ......**
முருகைய்யா முருகைய்யா முத்து குமரன் நீ ஐயா
முருகைய்யா முருகைய்யா முத்து குமரன் நீ ஐயா
https://www.youtube.com/watch?v=x3YPjeoQpUs

**அரகர சிவனரி அயனிவர் பரவிமு**
**னறுமுக சரவண ...... பவனேயென்**
**றநுதின மொழிதர அசுரர்கள் கெடஅயில்**
**அநலென எழவிடு ...... மதிவீரா**
**பரிபுர கமலம தடியிணை யடியவர்**
**உளமதி லுறவருள் ...... முருகேசா**
**பகவதி வரைமகள் உமைதர வருகுக**
**பரமன திருசெவி ...... களிகூர**
**உரைசெயு மொருமொழி பிரணவ முடிவதை**
**உரைதரு குருபர ...... வுயர்வாய**
**உலகம னலகில வுயிர்களு மிமையவ**
**ரவர்களு முறுவர ...... முநிவோரும்**
**பரவிமு னநுதின மனமகிழ் வுறவணி**
**பணிதிகழ் தணிகையி ...... லுறைவோனே**
**பகர்தரு குறமகள் தருவமை வநிதையு**
**மிருபுடை யுறவரு ...... பெருமாளே.**

## 242 இருப்பவல் திருப்புகழ் (திருத்தணிகை)

**தனத்தன தனத்தன தனத்தன தனத்தன**
**தனத்தன தனத்தன தனதான ......**
**இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர்**
**இடுக்கினை யறுத்திடு ...... மெனவோதும்**
**இசைத்தமிழ் நடத்தமி ழெனத்துறை விருப்புட**
**னிலக்கண இலக்கிய ...... கவிநாலுந்**
**தரிப்பவ ருரைப்பவர் நினைப்பவர் மிகச்சக**
**தலத்தினில் நவிற்றுத ...... லறியாதே**
**தனத்தினில் முகத்தினில் மனத்தினி லுருக்கிடு**

சமர்த்திகள் மயக்கினில் ...... விழலாமோ
கருப்புவில் வளைத்தணி மலர்க்கணை தொடுத்தியல்
களிப்புட னொளித்தெய்த ...... மதவேளைக்
கருத்தினில் நினைத்தவ னெருப்பெழ நுதற்படு
கனற்கணி லெரித்தவர் ...... கயிலாயப்
பொருப்பினி லிருப்பவர் பருப்பத வுமைக்கொரு
புறத்தினை யளித்தவர் ...... தருசேயே
புயற்பொழில் வயற்பதி நயப்படு திருத்தணி
பொருப்பினில் விருப்புறு ...... பெருமாளே.

## 243 இருமலு ரோக (திருத்தணிகை)

தனதன தான தனதன தான
தனதன தான ...... தனதான

இருமலு ரோக முயலகன் வாத
மெரிகுண நாசி ...... விடமேநீ
ரிழிவுவி டாத தலைவலி சோகை
யெழுகள மாலை ...... யிவையோடே
பெருவயி றீளை யெரிகுலை சூலை
பெருவலி வேறு ...... முளநோய்கள்
பிறவிகள் தோறு மெனைநலி யாத
படியுன தாள்கள் ...... அருள்வாயே
வருமொரு கோடி யசுரர்ப தாதி
மடியஅ நேக ...... இசைபாடி
வருமொரு கால வயிரவ ராட
வடிசுடர் வேலை ...... விடுவோனே
தருநிழல் மீதி லுறைமுகி லூர்தி
தருதிரு மாதின் ...... மணவாளா
சலமிடை பூவி னடுவினில் வீறு
தணிமலை மேவு ...... பெருமாளே.

## 249 எனக்கென யாவும் (திருத்தணிகை)

தனத்தன தானம் தனத்தன தானம்
தனத்தன தானம் தனதான ......

எனக்கென யாவும் படைத்திட நாளும்
இளைப்பொடு காலந் ...... தனிலோயா
எடுத்திடு காயந் தனைக்கொடு மாயும்
இலச்சையி லாதென் ...... பவமாற
உனைப்பல நாளுந் திருப்புக ழாலும்
உரைத்திடு வார்தங் ...... குளிமேவி

உணர்த்திய போதந் தனைப்பிரி யாதொண்
பொலச்சர ணானுந் ...... தொழுவேனோ
வினைத்திற மோடன் றெதிர்த்திடும் வீரன்
விழக்கொடு வேள்கொன் ...... றவனீயே
விளப்பென மேலென் றிடக்கய னாரும்
விருப்புற வேதம் ...... புகல்வோனே
சினத்தொடு சூரன் தனைக்கொடு வேலின்
சிரத்தினை மாறும் ...... முருகோனே
தினைப்புன மோவுங் குறக்கொடி யோடுந்
திருத்தணி மேவும் ...... பெருமாளே.

## 269 சினத்தவர் முடிக்கும் (திருத்தணிகை)

தனத்தன தனத்தம் தனத்தன தனத்தம்
தனத்தன தனத்தம் தனதான ......

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவர் ருயிர்க்குஞ் ...... சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் ...... றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் ...... பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் ...... செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் ...... தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் ...... கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் ...... கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் ...... பெருமாளே.

## 278 நினைத்தது எத்தனை (திருத்தணிகை)

தனத்த தத்தனத் ...... தனதான
தனத்த தத்தனத் ...... தனதான

நினைத்த தெத்தனையிற் ...... றவறாமல்
நிலைத்த புத்திதனைப் ...... பிரியாமற்
கனத்த தத்துவமுற் ...... றழியாமற்
கதித்த நித்தியசித் ...... தருள்வாயே
மனித்தர் பத்தர்தமக் ...... கெளியோனே

மதித்த முத்தமிழிற் ...... பெரியோனே
செனித்த புத்திரரிற் ...... சிறியோனே
திருத்த ணிப்பதியிற் ...... பெருமாளே.

## 303 அதிரும் கழல் (குன்றுதோறாடல்)

https://www.youtube.com/watch?v=_2p0RzpID2M

தனனந் தனன தந்த ...... தனதான
தனனந் தனன தந்த ...... தனதான

அதிருங் கழல்ப ணிந்து ...... னடியேனுன்
அபயம் புகுவ தென்று ...... நிலைகாண
இதயந் தனிலி ருந்து ...... க்ருபையாகி
இடர்சங் கைகள்க லங்க ...... அருள்வாயே
எதிரங் கொருவ ரின்றி ...... நடமாடும்
இறைவன் தனது பங்கி ...... லுமைபாலா
பதியெங் கிலுமி ருந்து ...... விளையாடிப்
பலகுன் றிலும மர்ந்த ...... பெருமாளே.

## 330 முட்டுப் பட்டு (காஞ்சீபுரம்)

தத்தத் தத்தத் ...... தனதான
தத்தத் தத்தத் ...... தனதான

முருகா முருகா வேல் முருகா; முருகா முருகா வேல் முருகா

https://www.youtube.com/watch?v=t5XUytvKYao

முட்டுப் பட்டுக் ...... கதிதோறும்
முற்றச் சுற்றிப் ...... பலநாளும்
தட்டுப் பட்டுச் ...... சுழல்வேனைச்
சற்றுப் பற்றக் ...... கருதாதோ
வட்டப் புட்பத் ...... தலமீதே
வைக்கத் தக்கத் ...... திருபாதா
கட்டத் தற்றத் ...... தருள்வோனே
கச்சிச் சொக்கப் ...... பெருமாளே.

## 401 இருவினை அஞ்ச (திருவருணை)

தனதன தந்த தனதன தந்த
தனதன தந்த தனதான ......

இருவினை யஞ்ச மலவகை மங்க
இருள்பிணி மங்க ...... மயிலேறி
இனவரு ளன்பு மொழியக டம்பு
வினதக முங்கொ ...... டளிபாடக்
கரிமுக னெம்பி முருகனெ னண்டர்
களிமலர் சிந்த ...... அடியேன்முன்
கருணைபொ ழிந்து முகமும லர்ந்து

கடுகிந டங்கொ ...... டருள்வாயே
திரிபுர மங்க மதனுடல் மங்க
திகழ்நகை கொண்ட ...... விடையேறிச்
சிவம்வெளி யங்க ணருள்குடி கொண்டு
திகழந டஞ்செய் ...... தெமையீண
அரசியி டங்கொள் மழுவுடை யெந்தை
அமலன்ம கிழ்ந்த ...... குருநாதா
அருணைவி லங்கல் மகிழ்குற மங்கை
அமளிந லங்கொள் ...... பெருமாளே.

## 425 செயசெய அருணா (திருவருணை)

தனதன தனனாத் தனதன தனனத்
தனதன தனனாத் தனதன தனனத்
தனதன தனனாத் தனதன தனனத் தனதான ......

செயசெய அருணாத் திரிசிவ யநமச்
செயசெய அருணாத் திரிமசி வயநச்
செயசெய அருணாத் திரிநம சிவயத் ...... திருமூலா
செயசெய அருணாத் திரியந மசிவச்
செயசெய அருணாத் திரிவய நமசிச்
செயசெய அருணாத் திரிசிவ யநமஸ்த் ...... தெனமாறி
செயசெய அருணாத் திரிதனின் விழிவைத்
தரகர சரணாத் திரியென உருகிச்
செயசெய குருபாக் கியமென மருவிச் ...... சுடர்தாளைச்
சிவசிவ சரணாத் திரிசெய செயெனச்
சரண்மிசை தொழுதேத் தியசுவை பெருகத்
திருவடி சிவவாக் கியகட லமுதைக் ...... குடியேனோ
செயசெய சரணாத் திரியென முநிவர்க்
கணமிது வினைகாத் திடுமென மருவச்
செடமுடி மலைபோற் றவுணர்க ளவியச் ...... சுடும்வேலா
திருமுடி யடிபார்த் திடுமென இருவர்க்
கடிதலை தெரியாப் படிநிண அருணச்
சிவசுடர் சிகிநாட் டவனிரு செவியிற் ...... புகல்வோனே
செயசெய சரணாத் திரியெனு மடியெற்
கிருவினை பொடியாக் கியசுடர் வெளியிற்
றிருநட மிதுபார்த் திடுமென மகிழ்பொற் ...... குருநாதா
திகழ்கிளி மொழிபாற் சுவையித ழமுதக்
குறமகள் முலைமேற் புதுமண மருவிச்
சிவகிரி அருணாத் திரிதல மகிழ்பொற் ...... பெருமாளே.

## 493 எழுகடல் மணலை (சிதம்பரம்)

தனதன தனன தனதன தனன
தனதன தனன தனதான ......

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி ...... அவதாரம்
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக ...... முடியாது
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு ...... மயர்வானார்
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் ...... தருவாயே
விழுதிக ழழகி மரகத வடிவி
விமலிமு னருளு ...... முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் ...... வருவோனே
எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை ...... யுடையோனே
இமையவர் முநிவர் பரவிய புலியு
ரினில்நட மருவு ...... பெருமாளே.

## 523 ஒருபதும் இருபதும் (ஸ்ரீ சைலம் திருமலை)

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன ...... தனதான

முருகையா முருகையா முத்து குமரன் நீ ஐயா
முருகையா முருகையா முத்து குமரன் நீ ஐயா
https://www.youtube.com/watch?v=x3YPjeoQpUs

ஒருபது மிருபது மறுபது முடனறு
முணர்வுற இருபத ...... முளநாடி
உருகிட முழுமதி தழலென வொளிதிகழ்
வெளியொடு வொளிபெற ...... விரவாதே
தெருவினில் மரமென எவரொடு முரைசெய்து
திரிதொழி லவமது ...... புரியாதே
திருமகள் மருவிய திரள்புய அறுமுக
தெரிசனை பெறஅருள் ...... புரிவாயே
பரிவுட னழகிய பழமொடு கடலைகள்
பயறொடு சிலவகை ...... பணியாரம்
பருகிடு பெருவயி றுடையவர் பழமொழி
எழுதிய கணபதி ...... யிளையோனே
பெருமலை யுருவிட அடியவ ருருகிட

பிணிகெட அருள்தரு ...... குமரேசா
பிடியொடு களிறுகள் நடையிட கலைதிரள்
பிணையமர் திருமலை ...... பெருமாளே.

## 525 சரவண பவநிதி (திருவேங்கடம்)

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன தனதன ...... தனதான

......... பாடல் .........

சரவண பவநிதி யறுமுக குருபர
சரவண பவநிதி யறுமுக குருபர
சரவண பவநிதி யறுமுக குருபர ...... எனவோதித்
தமிழினி லுருகிய வடியவ ரிடமுறு
சனனம ரணமதை யொழிவுற சிவமுற
தருபிணி துளவர மெமதுயிர் சுகமுற ...... வருள்வாயே
கருணைய விழிபொழி யொருதனி முதலென
வருகரி திருமுகர் துணைகொளு மிளையவ
கவிதைய முதமொழி தருபவ ருயிர்பெற ...... வருள்நேயா
கடலுல கினில்வரு முயிர்படு மவதிகள்
கலகமி னையதுள கழியவும் நிலைபெற
கதியுமு னதுதிரு வடிநிழல் தருவது ...... மொருநாளே
திரிபுர மெரிசெயு மிறையவ ரருளிய
குமரச மரபுரி தணிகையு மிகுமுயர்
சிவகிரி யிலும்வட மலையிலு முலவிய ...... வடிவேலா
தினமுமு னதுதுதி பரவிய அடியவர்
மனதுகு டியுமிரு பொருளிலு மிலகுவ
திமிரம லமொழிய தினகர னெனவரு ...... பெருவாழ்வே
அரவணை மிசைதுயில் நரகரி நெடியவர்
மருகனெ னவெவரு மதிசய முடையவ
அமலிவி மலிபரை உமையவ ளருளிய ...... முருகோனே
அதலவி தலமுதல் கிடுகிடு கிடுவென
வருமயி லினிதொளிர் ஷடுமையில் நடுவுற
அழகினு டனமரு மரகர சிவசிவ ...... பெருமாளே.

## 557 பகலிரவினில் (சென்னிமலை, திருசிராப்பள்ளி)

தனதனதனத் தனதான ......
தனதனதனத் தனதான ......

பகலிரவினிற் ...... றடுமாறா
பதிகுருவெனத் ...... தெளிபோத

ரகசியமுரைத் ...... தநுபூதி
ரதநிலைதனைத் ...... தருவாயே
இகபரமதற் ...... கிறையோனே
இயலிசையின்முத் ...... தமிழோனே
சகசிரகிரிப் ...... பதிவேளே
சரவணபவப் ...... பெருமாளே.

## 561 வாசித்து (திருசிராப்பள்ளி)

தானத்தத் தான தானன தானத்தத் தான தானன
தானத்தத் தான தானன ...... தந்ததான

வாசித்துக் காணொ ணாதது பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது ...... நெஞ்சினாலே
மாசர்க்குத் தோணொ ணாதது நேசர்க்குப் பேரொ ணாதது
மாயைக்குச் சூழொ ணாதது ...... விந்துநாத
ஓசைக்குத் தூர மானது மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதி யானது ...... கண்டுநாயேன்
யோகத்தைச் சேரு மாறுமெய்ஞ் ஞானத்தைப் போதி யாயினி
யூனத்தைப் போடி டாதும ...... யங்கலாமோ
ஆசைப்பட் டேனல் காவல்செய் வேடிச்சிக் காக மாமய
லாகிப்பொற் பாத மேபணி ...... கந்தவேளே
ஆலித்துச் சேல்கள் பாய்வய லூரத்திற் காள மோடட
ராரத்தைப் பூண்ம யூரது ...... ரங்கவீரா
நாசிக்குட் ப்ராண வாயுவை ரேசித்தெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொ ணாதென ...... நின்றநாதா
நாகத்துச் சாகை போயுயர் மேகத்தைச் சேர்சி ராமலை
நாதர்க்குச் சாமி யேசுரர் ...... தம்பிரானே.

## 567 பத்தியால் யானுனை (இரத்னகிரி)

தத்தனா தானனத் தனதான ......
தத்தனா தானனத் தனதான ......
வேல் முருகா வேல் முருகா வேல் முருகா வேல்
வேல் முருகா வேல் முருகா வேல் முருகா வேல்
https://www.youtube.com/watch?v=8mSPITSQt6o

பத்தியால் யானுனைப் ...... பலகாலும்
பற்றியே மாதிருப் ...... புகழ்பாடி
முத்தனா மாறெனைப் ...... பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் ...... கருள்வாயே
உத்தமா தானசற் ...... குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் ...... கிரிவாசா
வித்தகா ஞானசத் ...... திநிபாதா

வெற்றிவே லாயுதப் ...... பெருமாளே.

## 571 நிராமய புராதன (விராலிமலை)

தனாதன தனாதன தனாதன தனாதன
தனாதன தனாதனத் ...... தனதான

நிராமய புராதன பராபர வராம்ருத
நிராகுல சிராதிகப் ...... ப்ரபையாகி
நிராசசி வராஜத வராஜர்கள் பராவிய
நிராயுத புராரியச் ...... சுதன்வேதா
சுராலய தராதல சராசர பிராணிகள்
சொரூபமி வராதியைக் ...... குறியாமே
துரால்புகழ் பராதின கராவுள பராமுக
துரோகரை தராசையுற் ...... றடைவேனோ
இராகவ இராமன்முன் இராவண இராவண
இராவண இராஜனுட் ...... குடன்மாய்வென்
றிராகன்ம லராணிஜ புராணர்கு மராகலை
யிராஜசொ லவாரணர்க் ...... கிளையோனே
விராகவ சுராதிப பொராதுத விராதடு
விராயண பராயணச் ...... செருவூரா
விராவிய குராவகில் பராரைமு திராவளர்
விராலிம லைராஜதப் ...... பெருமாளே.

## 585 அன்பாக வந்து (சென்னிமலை, திருசிராப்பள்ளி)

தத்தனா தானனத் ...... தனதான
தத்தனா தானனத் ...... தனதான

அன்பாக வந்து உன்றாள் பணிந்து
ஐம்பூத மொன்ற ...... நினையாமல்
அன்பால் மிகுந்து நஞ்சாரு கண்க
ளம்போரு கங்கள் ...... முலைதானும்
கொந்தே மிகுந்து வண்டாடி நின்று
கொண்டாடு கின்ற ...... குழலாரைக்
கொண்டே நினைந்து மன்பேது மண்டி
குன்றா மலைந்து ...... அலைவேனோ
மன்றாடி தந்த மைந்தா மிகுந்த
வம்பார் கடம்பை ...... யணிவோனே
வந்தே பணிந்து நின்றார் பவங்கள்
வம்பே தொலைந்த ...... வடிவேலா
சென்றே யிடங்கள் கந்தா எனும்பொ
செஞ்சேவல் கொண்டு ...... வரவேணும்

**செஞ்சாலி கஞ்ச மொன்றாய் வளர்ந்த**
**செங்கோ டமர்ந்த ...... பெருமாளே.**

## 586 பந்து ஆடி அம் கை (திருச்செங்கோடு)

**தந்தான தந்த தந்தான தந்த**
**தந்தான தந்த ...... தனதான**
**செங்கோட மர்ந்த ...... பெருமாளே.**
**மங்காம லுன்ற ...... னருள்தாராய்**

https://www.youtube.com/watch?v=g7_7l6uanFM

**பந்தாடி யங்கை நொந்தார் பரிந்து**
**பைந்தார் புனைந்த ...... குழல்மீதே**
**பண்பார் சுரும்பு பண்பாடு கின்ற**
**பங்கே ருகங்கொள் ...... முகமீதே**
**மந்தார மன்றல் சந்தார மொன்றி**
**வன்பாத கஞ்செய் ...... தனமீதே**
**மண்டாசை கொண்டு விண்டாவி நைந்து**
**மங்காம லுன்ற ...... னருள்தாராய்**
**கந்தா அரன்றன் மைந்தா விளங்கு**
**கன்றா முகுந்தன் ...... மருகோனே**
**கன்றா விலங்க லொன்றாறு கண்ட**
**கண்டா வரம்பை ...... மணவாளா**
**செந்தா தடர்ந்த கொந்தார் கடம்பு**
**திண்டோள் நிரம்ப ...... அணிவோனே**
**திண்கோ டரங்க ளெண்கோ டுறங்கு**
**செங்கோட மர்ந்த ...... பெருமாளே.**

## 598 காலனிடத்து (திருச்செங்கோடு)

**தான தனத் தனதான ......**

https://www.youtube.com/watch?v=_B15pELalAk

**காலனிடத் ...... தணுகாதே**
**காசினியிற் ...... பிறவாதே**
**சீலஅகத் ...... தியஞான**
**தேனமுதைத் ...... தருவாயே**
**மாலயனுக் ...... கரியானே**
**மாதவரைப் ...... பிரியானே**
**நாலுமறைப் ...... பொருளானே**
**நாககிரிப் ...... பெருமாளே.**

## 599 தாமா தாம ஆலாபா (திருச்செங்கோடு)

**தானா தானா தானா தானா**
**தானா தானத் ...... தனதான**

......... பாடல் .........

தாமா தாமா லாபா லோகா
　தாரா தாரத் ...... தரணீசா
தானா சாரோ பாவா பாவோ
　நாசா பாசத் ...... தபராத
யாமா யாமா தேசா ரூடா
　யாரா யாபத் ...... தெனதாவி
யாமா காவாய் தீயே னீர்வா
　யாதே யீமத் ...... துகலாமோ
காமா காமா தீனா நீணா
　காவாய் காளக் ...... கிரியாய்கங்
காளா லீலா பாலா நீபா
　காமா மோதக் ...... கனமானின்
தேமார் தேமா காமீ பாகீ
　தேசா தேசத் ...... தவரோதுஞ்
சேயே வேளே பூவே கோவே
　தேவே தேவப் ...... பெருமாளே

## 616 ஐங்கரனை (கொங்கணகிரி)

தந்ததன தத்ததன தந்ததன தத்ததன
　தந்ததன தத்ததன ...... தனதான

ஐங்கரனை யொத்தமன மைம்புலம கற்றிவள
　ரந்திபக லற்றநினை ...... வருள்வாயே
அம்புவித னக்குள்வளர் செந்தமிழ்வ ழுத்தியுனை
　அன்பொடுது திக்கமன ...... மருள்வாயே
தங்கியத வத்துணர்வு தந்தடிமை முத்திபெற
　சந்திரவெ ளிக்குவழி ...... யருள்வாயே
தண்டிகைக னப்பவுசு எண்டிசைம திக்கவளர்
　சம்ப்ரமவி தத்துடனெ ...... யருள்வாயே
மங்கையர்சு கத்தைவெகு இங்கிதமெ னுற்றமன
　முன்றனைநி னைத்தமைய ...... அருள்வாயே
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரட்சைபுரி
　வந்தணைய புத்தியினை ...... யருள்வாயே
கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பரருள்
　கொண்டுஉட லுற்றபொரு ...... ளருள்வாயே
குஞ்சரமு கற்கிளைய கந்தனென வெற்றிபெறு
　கொங்கணகி ரிக்குள்வளர் ...... பெருமாளே.

## 636 திருமகள் உலாவும் (கதிர்காமம்)

**தனதனன தான தனதனன தான**
**தனதனன தானத் தனதான ......**

**திருமகளு லாவு மிருபுயமு ராரி**
**திருமருக நாமப் ...... பெருமாள்காண்**
**செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்**
**தெரிதருகு மாரப் ...... பெருமாள்காண்**
**மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு**
**மரகதம யூரப் ...... பெருமாள்காண்**
**மணிதரளம் வீசி யணியருவி சூழ**
**மருவுகதிர் காமப் ...... பெருமாள்காண்**
**அருவரைகள் நீறு படஅசுரர் மாள**
**அமர்பொருத வீரப் ...... பெருமாள்காண்**
**அரவுபிறை வாரி விரவுசடை வேணி**
**அமலர்குரு நாதப் ...... பெருமாள்காண்**
**இருவினையி லாத தருவினைவி டாத**
**இமையவர்கு லேசப் ...... பெருமாள்காண்**
**இலகுசிலை வேடர் கொடியினதி பார**
**இருதனவி நோதப் ...... பெருமாளே.**

## 656 அடல் அரி மகவு (வெள்ளிகரம்)

**தனதன தனன தனதன தனன**
**தய்ய தனத்த தந்த ...... தனதானா**
**அடலரி மகவு விதிவழி யொழுகு**
**மைவ ருமொய்க்கு ரம்பை ...... யுடனாளும்**
**அலைகட லுலகி லலம்வரு கலக**
**வைவர் தமக்கு டைந்து ...... தடுமாறி**
**இடர்படு மடிமை யுளமுரை யுடலொ**
**டெல்லை விடப்ர பஞ்ச ...... மயல்தீர**
**எனதற நினது கழல்பெற மவுன**
**வெல்லை குறிப்ப தொன்று ...... புகல்வாயே**
**வடமணி முலையு மழகிய முகமும்**
**வள்ளை யெனத்த யங்கு ...... மிருகாதும்**
**மரகத வடிவு மடலிடை யெழுதி**
**வள்ளி புனத்தில் நின்ற ...... மயில்வீரா**
**விடதர திகுணர் சசிதரர் நிமலர்**
**வெள்ளி மலைச்ச யம்பு ...... குருநாதா**

விகசித கமல பரிபுர முளரி
வெள்ளி கரத்த மர்ந்த ...... பெருமாளே.

## 675 புவிபுனல் காலும் (திருவாலங்காடு)

தனதன தானந் தாத்த தனதன தானந் தாத்த
தனதன தானந் தாத்த ...... தனதான

புவிபுனல் காலுங் காட்டி சிகியொடு வானுஞ் சேர்த்தி
புதுமன மானும் பூட்டி ...... யிடையூடே
பொறிபுல னீரைந் தாக்கி கருவிகள் நாலுங் காட்டி
புகல்வழி நாலைந் தாக்கி ...... வருகாயம்
பவவினை நூறுங் காட்டி சுவமதி தானுஞ் சூட்டி
பசுபதி பாசங் காட்டி ...... புலமாயப்
படிமிசை போவென் றோட்டி அடிமையை நீவந் தேத்தி
பரகதி தானுங் காட்டி ...... யருள்வாயே
சிவமய ஞானங் கேட்க தவமுநி வோரும் பார்க்க
திருநட மாடுங் கூத்தர் ...... முருகோனே
திருவளர் மார்பன் போற்ற திசைமுக னாளும் போற்ற
ஜெகமொடு வானங் காக்க ...... மயிலேறிக்
குவடொடு சூரன் தோற்க எழுகடல் சூதந் தாக்கி
குதர்வடி வேலங் கோட்டு ...... குமரேசா
குவலயம் யாவும் போற்ற பழனையி லாலங் காட்டில்
குறமகள் பாதம் போற்று ...... பெருமாளே.

## 676 வடிவது நீலம் (திருவாலங்காடு)

தனதன தானந் தாத்த தனதன தானந் தாத்த
தனதன தானந் தாத்த ...... தனதான

வடிவது நீலங் காட்டி முடிவுள காலன் கூட்டி
வரவிடு தூதன் கோட்டி ...... விடுபாசம்
மகனொடு மாமன் பாட்டி முதலுற வோருங் கேட்டு
மதிகெட மாயந் தீட்டி ...... யுயிர்போமுன்
படிமிசை தாளுங் காட்டி யுடலுறு நோய்பண் டேற்ற
பழவினை பாவந் தீர்த்து ...... னடியேனைப்
பரிவொடு நாளுங் காத்து விரிதமி ழாலங் கூர்த்த
பரபுகழ் பாடென் றாட்கொ ...... டருள்வாயே
முடிமிசை சோமன் சூட்டி வடிவுள ஆலங் காட்டில்
முதிர்நட மாடுங் கூத்தர் ...... புதல்வோனே
முருகவிழ் தாருஞ் சூட்டி யொருதனி வேழங் கூட்டி
முதல்மற மானின் சேர்க்கை ...... மயல்கூர்வாய்
இடியென வேகங் காட்டி நெடிதரு சூலந் தீட்டி

யெதிர்பொரு சூரன் தாக்க ...... வரஏகி
இலகிய வேல்கொண் டார்த்து உடலிரு கூறன் றாக்கி
யிமையவ ரேதந் தீர்த்த ...... பெருமாளே.

## 688 அமரும் அமரர் (திருமயிலை)

தனன தனதனன தனன தனதனன
தனன தனதனன ...... தனதான

அமரு மமரரினி லதிக னயனுமரி
யவரும் வெருவவரு ...... மதிகாளம்
அதனை யதகரண விதன பரிபுரண
மமைய னவர்கரண ...... அகிலேச
நிமிர வருள்சரண நிபிட மதெனவுன
நிமிர சமிரமய ...... நியமாய
நிமிட மதனிலுண வலசி வசுதவர
நினது பதவிதர ...... வருவாயே
சமர சமரசுர அசுர விதரபர
சரத விரதஅயில் ...... விடுவோனே
தகுர்த தகுர்ததிகு திகுர்த திகுர்ததிகு
தரர ரரரரிரி ...... தகுர்தாத
எமர நடனவித மயிலின் முதுகில்வரு
மிமைய மகள்குமர ...... எமதீச
இயலி னியல்மயிலை நகரி லினிதுறையு
மெமது பரகுரவ ...... பெருமாளே.

## 724 அண்டர்பதி குடியேற (சிறுவை)

வீடு கட்ட பாட வேண்டிய திருப்புகழ்
தந்ததன தனதான தந்ததன தனதான
தந்ததன தனதான ......தனதான
https://www.youtube.com/watch?v=ivWFnMjuyf4

அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
அண்டர்மன மகிழ்மீற ...... வருளாலே
அந்தரியொ டுடனாடு சங்கரனு மகிழ்கூர
ஐங்கரனு முமையாளு ...... மகிழ்வாக
மண்டலமு முநிவோரு மெண்டிசையி லுளபேரு
மஞ்சினனு மயனாரு ...... மெதிர்காண
மங்கையுட னரிதானு மின்பமுற மகிழ்கூற
மைந்துமயி லுடனாடி ...... வரவேணும்
புண்டரிக விழியாள அண்டர்மகள் மணவாள
புந்திநிறை யறிவாள ...... வுயர்தோளா

**பொங்குகட லுடனாகம் விண்டுவரை யிகல்சாடு**
**பொன்பரவு கதிர்வீசு ...... வடிவேலா**
**தண்டரள மணிமார்ப செம்பொனெழில் செறிரூப**
**தண்டமிழின் மிகுநேய ...... முருகேசா**
**சந்ததமு மடியார்கள் சிந்தையது குடியான**
**தண்சிறுவை தனில்மேவு ...... பெருமாளே.**

## 725 சீதள வாரிஜ (சிறுவை)

**தானன தானன தானான தானன**
**தானன தானன தானான தானன**
**தானன தானன தானான தானன ...... தனதான**

**சீதள வாரிஜ பாதாந மோநம**
**நாரத கீதவி நோதாந மோநம**
**சேவல மாமயில் ப்ரீதாந மோநம ...... மறைதேடுஞ்**
**சேகர மானப்ர தாபாந மோநம**
**ஆகம சாரசொ ரூபாந மோநம**
**தேவர்கள் சேனைம கீபாந மோநம ...... கதிதோயப்**
**பாதக நீவுகு டாராந மோநம**
**மாவசு ரேசக டோராந மோநம**
**பாரினி லேஜய வீராந மோநம ...... மலைமாது**
**பார்வதி யாள்தரு பாலாந மோநம**
**நாவல ஞானம னோலாந மோநம**
**பாலகு மாரசு வாமீந மோநம ...... அருள்தாராய்**
**போதக மாமுக னேரான சோதர**
**நீறணி வேணியர் நேயாப்ர பாகர**
**பூமக ளார்மரு கேசாம கோததி ...... யிகல்சூரா**
**போதக மாமறை ஞானாத யாகர**
**தேனவிழ் நீபந றாவாரு மார்பக**
**பூரண மாமதி போலாறு மாமுக ...... முருகேசா**
**மாதவர் தேவர்க ளோடேமு ராரியு**
**மாமலர் மீதுறை வேதாவு மேபுகழ்**
**மாநில மேழினு மேலான நாயக ...... வடிவேலா**
**வானவ ரூரினும் வீறாகி வீறள**
**காபுரி வாழ்வினு மேலாக வேதிரு**
**வாழ்சிறு வாபுரி வாழ்வேசு ராதிபர் ...... பெருமாளே.**

## 780 எத்தனை கோடி (வைத்தீசுரன் கோயில்)

**தத்தன தான தான தத்தன தான தான**
**தத்தன தான தான தனதான ......**

எத்தனை கோடி கோடி விட்டுட லோடி யாடி
யெத்தனை கோடி போன ...... தளவேதோ
இப்படி மோக போக மிப்படி யாகி யாகி
யிப்படி யாவ தேது ...... இனிமேலோ
சித்திடில் சீசி சீசி குத்திர மாய மாயை
சிக்கினி லாயு மாயு ...... மடியேனைச்
சித்தினி லாட லோடு முத்தமிழ் வாண ரோது
சித்திர ஞான பாத ...... மருள்வாயே
நித்தமு மோது வார்கள் சித்தமெ வீட தாக
நிர்த்தம தாடு மாறு ...... முகவோனே
நிட்கள ரூபர் பாதி பச்சுரு வான மூணு
நெட்டிலை சூல பாணி ...... யருள்பாலா
பைத்தலை நீடு மாயி ரத்தலை மீது பீறு
பத்திர பாத நீல ...... மயில்வீரா
பச்சிள பூக பாளை செய்க்கயல் தாவு வேளூர்
பற்றிய மூவர் தேவர் ...... பெருமாளே.

## 786 சூலம் என ஓடு (திருக்கடவூர்)

தானதன தான தத்த தானதன தான தத்த
தானதன தான தத்த தனதான ......

சூலமென வோடு சர்ப்ப வாயுவைவி டாத டக்கி
தூயவொளி காண முத்தி ...... விதமாகச்
சூழுமிருள் பாவ கத்தை வீழ அழ லூடெ ரித்து
சோதிமணி பீட மிட்ட ...... மடமேவி
மேலைவெளி யாயி ரத்து நாலிருப ராப ரத்தின்
மேவியரு ணாச லத்தி ...... னுடன்மூழ்கி
வேலுமயில் வாக னப்ர காசமதி லேத ரித்து
வீடுமது வேசி றக்க ...... அருள்தாராய்
ஓலசுர ராழி யெட்டு வாளகிரி மாய வெற்பு
மூடுருவ வேல்தொ டுத்த ...... மயில்வீரா
ஓதுகுற மான்வ னத்தில் மேவியவள் கால்பி டித்து
ளோமெனுப தேச வித்தொ ...... டணைவோனே
காலனொடு மேதி மட்க வூழிபுவி மேல்கி டத்து
காலனிட மேவு சத்தி ...... யருள்பாலா
காலமுதல் வாழ்பு விக்க தாரநகர் கோபு ரத்துள்
கானமயில் மேல்த ரித்த ...... பெருமாளே.

## 798 மருக்குலாவிய (திருவிடைக்கழி)

தனத்த தானன தனதன ...... தனதான

மருக்கு லாவிய மலரணை ...... கொதியாதே
வளர்த்த தாய்தமர் வசையது ...... மொழியாதே
கருக்கு லாவிய அயலவர் ...... பழியாதே
கடப்ப மாலையை யினிவர ...... விடவேணும்
தருக்கு லாவிய கொடியிடை ...... மணவாளா
சமர்த்த னேமணி மரகத ...... மயில்வீரா
திருக்கு ராவடி நிழல்தனி ...... லுறைவோனே
திருக்கை வேல்வடி வழகிய ...... பெருமாளே.

## 816 கூசாதே பார் (திருவாரூர்)

தானா தானா தானா தானா
தானா தானத் ...... தனதான

கூசா தேபா ரேசா தேமால்
கூறா நூல்கற் ...... றுளம்வேறு
கோடா தேவேல் பாடா தேமால்
கூர்கூ தாளத் ...... தொடைதோளில்
வீசா தேபேர் பேசா தேசீர்
வேதா தீதக் ...... கழல்மீதே
வீழா தேபோய் நாயேன் வாணாள்
வீணே போகத் ...... தகுமோதான்
நேசா வானோ ரீசா வாமா
நீபா கானப் ...... புனமானை
நேர்வா யார்வாய் சூர்வாய் சார்வாய்
நீள்கார் சூழ்கற் ...... பகசாலத்
தேசா தீனா தீனா ரீசா
சீரா ரூரிற் ...... பெருவாழ்வே
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் ...... பெருமாளே.

## 817 கூர்வாய் நாராய் (திருவாரூர்)

தானா தானா தானா தானா
தானா தானத் ...... தனதான

கூர்வாய் நாராய் வாராய் போனார்
கூடா ரேசற் ...... றலஆவி
கோதா னேன்மா தாமா றானாள்
கோளே கேள்மற் ...... றிளவாடை
ஈர்வாள் போலே மேலே வீசா
ஏறா வேறிட் ...... டதுதீயின்
ஈயா வாழ்வோர் பேரே பாடா

ஈடே றாரிற் ...... கெடலாமோ
சூர்வா ழாதே மாறா தேவாழ்
சூழ்வா னோர்கட் ...... கருள்கூருந்
தோலா வேலா வீறா ரூர்வாழ்
சோதீ பாகத் ...... துமையூடே
சேர்வாய் நீதீ வானோர் வீரா
சேரா ரூரைச் ...... சுடுவார்தஞ்
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் ...... பெருமாளே.

## 818 பாலோ தேனோ பாகோ (திருவாரூர்)

தானா தானா தானா தானா
தானா தானத் ...... தனதான

பாலோ தேனோ பாகோ வானோர்
பாரா வாரத் ...... தமுதேயோ
பாரோர் சீரோ வேளேர் வாழ்வோ
பானோ வான்முத் ...... தெனநீளத்
தாலோ தாலே லோபா டாதே
தாய்மார் நேசத் ...... துனுசாரந்
தாரா தேபே ரீயா தேபே
சாதே யேசத் ...... தகுமோதான்
ஆலோல் கேளா மேலோர் நாண்மா
லானா தேனற் ...... புனமேபோய்
ஆயாள் தாள்மேல் வீழா வாழா
ஆளா வேளைப் ...... புகுவோனே
சேலோ டேசே ராரால் சாலார்
சீரா ரூரிற் ...... பெருவாழ்வே
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் ...... பெருமாளே.

## 821 கரமு முளரியின் (திருவாரூர்)

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான ......

கரமு முளரியின் மலர்முக மதிகுழல்
கனம தெனுமொழி கனிகதிர் முலைநகை
கலக மிடுவிழி கடலென விடமென ...... மனதூடே
கருதி யனநடை கொடியிடை யியல்மயில்
கமழு மகிலுட னிளகிய ம்ருகமத

களப புளகித கிரியினு மயல்கொடு ...... திரிவேனும்
இரவு பகலற இகலற மலமற
இயலு மயலற விழியினி ரிழிவர
இதய முருகியெ யொருகுள பதமுற ...... மடலூடே
யெழுத அரியவள் குறமக ளிருதன
கிரியில் முழுகின இளையவ னெனுமுரை
யினிமை பெறுவது மிருபத மடைவது ...... மொருநாளே
சுரபி மகவினை யெழுபொருள் வினவிட
மனுவி னெறிமணி யசைவுற விசைமிகு
துயரில் செவியினி லடிபட வினவுமி ...... னதிதீது
துணிவி லிதுபிழை பெரிதென வருமநு
உருகி யரகர சிவசிவ பெறுமதொர்
சுரபி யலமர விழிபுனல் பெருகிட ...... நடுவாகப்
பரவி யதனது துயர்கொடு நடவிய
பழுதின் மதலையை யுடலிரு பிளவொடு
படிய ரதமதை நடவிட மொழிபவ ...... னருளாரூர்ப்
படியு லறுமுக சிவசுத கணபதி
யிளைய குமரநி ருபபதி சரவண
பரவை முறையிட அயில்கொடு நடவிய ...... பெருமாளே.

## 835 சந்தனந்திமிர்ந்து (எண்கண்)

தந்த தந்த தந்த தந்த, தந்த தந்த தந்த தந்த
தந்த தந்த தந்த தந்த ...... தனதான

https://www.youtube.com/watch?v=MZjOc2whI-k&pbjreload=10

சந்த னந்தி மிர்ந்த ணைந்து குங்கு மங்க டம்பி லங்கு
சண்ப கஞ்செ றிந்தி லங்கு ...... திரடோளுந்
தண்டை யஞ்சி லம்ப லம்ப வெண்டை யஞ்ச லன்ச லென்று
சஞ்சி தஞ்ச தங்கை கொஞ்ச ...... மயிலேறித்
திந்தி மிந்தி மிந்தி மிந்தி தந்த னந்த னந்த னென்று
சென்ற சைந்து கந்து வந்து ...... க்ருபையோடே
சிந்தை யங்கு லம்பு குந்து சந்த தம்பு கழ்ந்து ணர்ந்து
செம்ப தம்ப ணிந்தி ரென்று ...... மொழிவாயே
அந்த மந்தி கொண்டி லங்கை வெந்த ழிந்தி டும்ப கண்டன்
அங்க முங்கு லைந்த ரங்கொள் ...... பொடியாக
அம்ப கும்ப னுங்க லங்க வெஞ்சி னம்பு ரிந்து நின்று
அம்பு கொண்டு வென்ற கொண்டல் ...... மருகோனே
இந்து வுங்க ரந்தை தும்பை கொன்றை யுஞ்ச லம்பு னைந்தி
டும்ப ரன்ற னன்பில் வந்த ...... குமரேசா

**இந்தி ரன்ப தம்பெ றண்டர் தம்ப யங்க டிந்த பின்பு**
**எண்க ணங்க மர்ந்தி ருந்த ...... பெருமாளே.**

## 847 எருவாய் கருவாய் (திருவீழிமிழலை)

**தனனா தனனா தனனா தனனா**
**தனனா தனனா தனதான ......**
**இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி ...... வரவேணும்**
https://www.youtube.com/watch?v=t3oUHPIl_FA

**எருவாய் கருவாய் தனிலே யுருவா**
**யிதுவே பயிராய் ...... விளைவாகி**
**இவர்போ யவரா யவர்போ யிவரா**
**யிதுவே தொடர்பாய் ...... வெறிபோல**
**ஒருதா யிருதாய் பலகோ டியதா**
**யுடனே யவமா ...... யழியாதே**
**ஒருகால் முருகா பரமா குமரா**
**உயிர்கா வெனவோ ...... தருள்தாராய்**
**முருகா வெனவோர் தரமோ தடியார்**
**முடிமே லிணைதா ...... ளருள்வோனே**
**முநிவோ ரமரோர் முறையோ வெனவே**
**முதுசூ ருரமேல் ...... விடும்வேலா**
**திருமால் பிரமா வறியா தவர்சீர்**
**சிறுவா திருமால் ...... மருகோனே**
**செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்**
**திருவீ ழியில்வாழ் ...... பெருமாளே.**

## 858 அறுகுநுனி பனி (திருவிடைமருதூர்)

**தனதனன தனதனன தனதனன தனதனன**
**தான தானனா தான தானனா**
**தனதனன தனதனன தனதனன தனதனன**
**தான தானனா தான தானனா**
**தனதனன தனதனன தனதனன தனதனன**
**தான தானனா தான தானனா தனதன தனதான ......**

**அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு**
**ஆக மாகியோர் பால ரூபமாய்**
**அருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய**
**ஆயி தாதையார் மாய மோகமாய்**
**அருமையினி லருமையிட மொளுமொளென வுடல்வளர**
**ஆளு மேளமாய் வால ரூபமாய் ...... அவரொரு பெரியோராய்**
**அழகுபெறு நடையடைய கிறுதுபடு மொழிபழகி**
**ஆவி யாயவோர் தேவி மாருமாய்**
**விழுசுவரை யரிவையர்கள் படுகுழியை நிலைமையென**

வீடு வாசலாய் மாட கூடமாய்
அணுவளவு தவிடுமிக பிதிரவிட மனமிறுகி
ஆசை யாளராய் ஊசி வாசியாய் ...... அவியுறு சுடர்போலே
வெறுமிடிய னொருதவசி யமுதுபடை யெனுமளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகி யவர்களொடு
சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியுமொரு
வீணி யார்சொலே மேல தாயிடா ...... விதிதனை நினையாதே
மினுகுமினு கெனுமுடல மறமுறுகி நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோஎனா
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலா யாளி வாயராய் ...... மிடையுற வருநாளில்
வறுமைகளு முடுகிவர வுறுபொருளு நழுவசில
வாத மூதுகா மாலை சோகைநோய்
பெருவயிறு வயிறுவலி படுவன்வர இருவிழிகள்
பீளை சாறிடா ஈளை மேலிடா
வழவழென உமிழுமது கொழகொழென ஒழுகிவிழ
வாடி யூனெலாம் நாடி பேதமாய் ...... மனையவள் மனம்வேறாய்
மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர் சீயெனா வாலர் சீயெனா
கனவுதனி லிரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவெனா வீடு போவெனா
வலதழிய விரகழிய வுரைகுழறி விழிசொருகி
வாயு மேலிடா ஆவி போகுநாள் ...... மனிதர்கள் பலபேச
இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ
ஏழை மாதராள் மோதி மேல்விழா
எனதுடைமை யெனதடிமை யெனுமறிவு சிறிதுமற
ஈமொ லேலெனா வாயை ஆவெனா
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய் ...... எரிதனி லிடும்வாழ்வே
இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டார்களோ பாச நாசனே
இருவினைமு மலமுமற இறவியொடு பிறவியற

ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா ...... இமையவர் பெருமாளே.

## 904 என்னால் பிறக்கவும் (வயலூர்)

தன்னா தனத்தன தன்னா தனத்தன
தன்னா தனத்தன ...... தந்ததான
செங்கோட மர்ந்த ...... பெருமாளே.
மங்காம லூன்ற ...... னருள்தாராய்
https://www.youtube.com/watch?v=g7_7l6uanFM

என்னால் பிறக்கவும் என்னா லிறக்கவும்
என்னால் துதிக்கவும் ...... கண்களாலே
என்னா லழைக்கவும் என்னால் நடக்கவும்
என்னா லிருக்கவும் ...... பெண்டிர்வீடு
என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்
என்னால் சலிக்கவும் ...... தொந்தநோயை
என்னா லெரிக்கவும் என்னால் நினைக்கவும்
என்னால் தரிக்கவும் ...... இங்குநானார்
கன்னா ருரித்தஎன் மன்னா எனக்குநல்
கர்ணா மிர்தப்பதம் ...... தந்தகோவே
கல்லார் மனத்துட னில்லா மனத்தவ
கண்ணா டியிற்றடம் ...... கண்டவேலா
மன்னான தக்கனை முன்னாள்மு டித்தலை
வன்வாளி யிற்கொளும் ...... தங்கரூபன்
மன்னா குறத்தியின் மன்னா வயற்பதி
மன்னா முவர்க்கொரு ...... தம்பிரானே.

## 925 தசையாகிய (கருவூர்)

தனனா தனனத் தனனா தனனத்
தனனா தனனத் ...... தனதான
https://www.youtube.com/watch?v=_B15pELalAk (19th min)

தசையா கியகற் றையினால் முடியத்
தலைகா லளவொப் ...... பனையாயே
தடுமா றுதல்சற் றொருநா ளுலகிற்
றவிரா வுடலத் ...... தினைநாயேன்
பசுபா சமும்விட் டறிவா லறியப்
படுபூ ரணநிட் ...... களமான
பதிபா வனையுற் றநுபூ தியிலப்
படியே யடைவித் ...... தருள்வாயே
அசலே சுரர்புத் திரனே குணதிக்

கருணோ தயமுத் ...... தமிழோனே
அகிலா கமவித் தகனே துகளற்
றவர்வாழ் வயலித் ...... திருநாடா
கசிவா ரிதயத் தமிர்தே மதுபக்
கமலா லயன்மைத் ...... துனவேளே
கருணா கரசற் குருவே குடகிற்
கருவூ ரழகப் ...... பெருமாளே.

### 931 வண்டுபோற் சார (திருவெஞ்சமாக்கூடல்)

தந்தனாத் தானத் ...... தனதான

https://www.youtube.com/watch?v=_B15pELalAk (12th min)

வண்டுபோற் சாரத் ...... தருள்தேடி
மந்திபோற் காலப் ...... பிணிசாடிச்
செண்டுபோற் பாசத் ...... துடனாடிச்
சிந்தைமாய்த் தேசித் ...... தருள்வாயே
தொண்டராற் காணப் ...... பெறுவோனே
துங்கவேற் கானத் ...... துறைவோனே
மிண்டராற் காணக் ...... கிடையானே
வெஞ்சமாக் கூடற் ...... பெருமாளே.

### 932 இருவினைப் பிறவி (திருப்பாண்டிக்கொடுமுடி)

தனதனத் தனனத் ...... தனதான

https://www.youtube.com/watch?v=_B15pELalAk (14th min)

இருவினைப் பிறவிக் ...... கடல்மூழ்கி
இடர்கள்பட் டலையப் ...... புகுதாதே
திருவருட் கருணைப் ...... ப்ரபையாலே
திரமெனக் கதியைப் ...... பெறுவேனோ
அரியயற் கறிதற் ...... கரியானே
அடியவர்க் கெளியற் ...... புதநேயா
குருவெனச் சிவனுக் ...... கருள்போதா
கொடுமுடிக் குமரப் ...... பெருமாளே.

### 943 இறவாமற் பிறவாமல் (அவிநாசி)

தனதானத் தனதான தனதானத் தனதான ......

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் ...... குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் ...... தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் ...... குமரேசா
அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் ...... பெருமாளே.

### 973 சுரும்பு அணி (இலஞ்சி)

தனந்தன தந்த தனந்தன தந்த

தனந்தன தந்த ...... தனதானா
https://www.youtube.com/watch?v=Nz96LXLbsuY

**சுரும்பணி கொண்டல் நெடுங்குழல் கண்டு**
**துரந்தெறி கின்ற ...... விழிவேலால்**
**சுழன்றுசு ழன்று துவண்டுது வண்டு**
**சுருண்டும யங்கி ...... மடவார்தோள்**
**விரும்பிவ ரம்பு கடந்துந டந்து**
**மெலிந்துத ளர்ந்து ...... மடியாதே**
**விளங்குக டம்பு விழைந்தணி தண்டை**
**விதங்கொள்ச தங்கை ...... யடிதாராய்**
**பொருந்தல மைந்து சிதம்பெற நின்ற**
**பொலங்கிரி யொன்றை ...... யெறிவோனே**
**புகழ்ந்தும கிழ்ந்து வணங்குகு ணங்கொள்**
**புரந்தரன் வஞ்சி ...... மணவாளா**
**இரும்புன மங்கை பெரும்புள கஞ்செய்**
**குரும்பைம ணந்த ...... மணிமார்பா**
**இலஞ்சியில் வந்த இலஞ்சிய மென்று**
**இலஞ்சிய மர்ந்த ...... பெருமாளே.**

## 974 மாலையில் வந்து (இலஞ்சி)

தான தனந்த தான தனந்த
தனா தனந்த ...... தனதான
https://www.youtube.com/watch?v=TcsdCVz2ykU

**மாலையில் வந்து மாலை வழங்கு**
**மாலை யநங்கன் ...... மலராலும்**
**வாடை யெழுந்து வாடை செறிந்து**
**வாடை யெறிந்த ...... அனலாலுங்**
**கோல மழிந்து சால மெலிந்து**
**கோமள வஞ்சி ...... தளராமுன்**
**கூடிய கொங்கை நீடிய அன்பு**
**கூரவு மின்று ...... வரவேணும்**
**கால னடுங்க வேலது கொண்டு**
**கானில் நடந்த ...... முருகோனே**
**கான மடந்தை நாண மொழிந்து**
**காத லிரங்கு ...... குமரேசா**
**சோலை வளைந்து சாலி விளைந்து**
**சூழு மிலஞ்சி ...... மகிழ்வோனே**
**சூரிய னஞ்ச வாரியில் வந்த**
**சூரனை வென்ற ...... பெருமாளே.**

## 998 நாலிரண்டிதழாலே (பொதுப்பாடல்கள்)

**நாலி ரண்டித ழாலே கோலிய**
**ஞால முண்டக மேலே தானிள**
**ஞாயி றென்றுறு கோலா காலனு மதின்மேலே ......**
**ஞால முண்டபி ராணா தாரனும்**
**யோக மந்திர மூலா தாரனு**
**நாடி நின்றப்ர பாவா காரனு நடுவாக ......**
**மேலி ருந்தகி ரீடா பீடமு**
**நூல றிந்தம ணீமா மாடமு**
**மேத கும்ப்ரபை கோடா கோடியு மிடமாக ......**
**வீசி நின்றுள தூபா தீபவி**
**சால மண்டப மீதே யேறிய**
**வீர பண்டித வீரா சாரிய வினைதீராய் ......**
**ஆல கந்தரி மோடா மோடிகு**
**மாரி பிங்கலை நானா தேசிய**
**மோகி மங்கலை லோகா லோகியெ வுயிர்பாலும் ......**
**ஆன சம்ப்ரமி மாதா மாதவி**
**ஆதி யம்பிகை ஞாதா வானவ**
**ராட மன்றினி லாடா நாடிய அபிராமி ......**
**கால சங்கரி சீலா சீலித்ரி**
**சூலி மந்த்ரச பாஷா பாஷணி**
**காள கண்டிக பாலீ மாலினி ......கலியாணி**
**காம தந்திர லீலா லோகினி**
**வாம தந்திர நூலாய் வாள்சிவ**
**காம சுந்தரி வாழ்வே தேவர்கள் .பெருமாளே ......**

## 1002 கடலை பயறொடு (பொதுப்பாடல்கள்(

**தனன தனதன தனதன தனதன**
**தனன தனதன தனதன தனதன**
**தனன தனதன தனதன தனதன ...... தனதான**

**கடலை பயறொடு துவரையெ ளவல்பொரி**
**சுகியன் வடைகனல் கதலியி னமுதொடு**
**கனியு முதுபல கனிவகை நலமிவை ...... யினிதாகக்**
**கடல்கொள் புவிமுதல் துளிர்வொடு வளமுற**
**அமுது துதிகையில் மனமது களிபெற**
**கருணை யுடனளி திருவருள் மகிழ்வுற ...... நெடிதான**
**குடகு வயிறினி லடைவிடு மதகரி**
**பிறகு வருமொரு முருகசண் முகவென**

குவிய இருகர மலர்விழி புனலொடு ...... பணியாமற்
கொடிய நெடியன அதிவினை துயர்கொடு
வறுமை சிறுமையி னலைவுட னரிவையர்
குழியில் முழுகியு மழுகியு முழல்வகை ...... யொழியாதோ
நெடிய கடலினில் முடுகியெ வரமுறு
மறலி வெருவுற ரவிமதி பயமுற
நிலமு நெறுநெறு நெறுவென வருமொரு ...... கொடிதான
நிசிசர் கொடுமுடி சடசட சடவென
பகர கிரிமுடி கிடுகிடு கிடுவென
நிகரி லயில்வெயி லெழுபசு மையநிற ...... முளதான
நடன மிடுபரி துரகத மயிலது
முடுகி கடுமையி லுலகதை வலம்வரு
நளின பதவர நதிகுமு குமுவென ...... முநிவோரும்
நறிய மலர்கொடு ஹரஹர ஹரவென
அமரர் சிறைகெட நறைகமழ் மலர்மிசை
நணியெ சரவண மதில்வள ரழகிய ...... பெருமாளே.

## 1015 விடம் என அயில் (பொதுப்பாடல்கள்)

தனதன தனதன தனதன தனதன தனதன தனதன
தத்தத் தத்தன தத்தத் தத்தன ...... தந்ததான

......... பாடல் .........

விடமென அயிலென அடுவன நடுவன மிளிர்வன சுழல்விழி
வித்தைத் குப்பக ரொப்புச் சற்றிலை ...... யென்றுபேசும்
விரகுடை வனிதைய ரணைமிசை யுருகிய வெகுமுக கலவியில்
இச்சைப் பட்டுயிர் தட்டுப் பட்டுவு ...... ழன்றுவாடும்
நடலையில் வழிமிக அழிபடு தமியனை நமன்விடு திரளது
கட்டிச் சிக்கென வொத்திக் கைக்கொடு ...... கொண்டுபோயே
நரகதில் விடுமெனு மளவினி லிலகிய நறைகமழ் திருவடி
முத்திக் குட்படு நித்யத் தத்துவம் ...... வந்திடாதோ
இடியென அதிர்குரல் நிசிசரர் குலபதி யிருபது திரள்புய
மற்றுப் பொற்றலை தத்தக் கொத்தொடு ...... நஞ்சுவாளி
எரியெழ முடுகிய சிலையின ரழகொழு கியல்சிறு வினைமகள்
பச்சைப் பட்சித னைக்கைப் பற்றிடு ...... மிந்த்ரலோகா
வடவரை யிடிபட அலைகடல் சுவறிட மகவரை பொடிபட
மைக்கட் பெற்றிடு முக்ரக் கட்செவி ...... யஞ்சசூரன்
மணிமுடி சிதறிட அலகைகள் பலவுடன் வயிரவர் நடமிட
முட்டிப் பொட்டெழ வெட்டிக் குத்திய ...... தம்பிரானே

## 1028 காதி மோதி (பொதுப்பாடல்கள்)

தான தான தானான தானத் ...... தனதான

**காதி மோதி வாதாடு நூல்கற் ...... றிடுவோருங்**
**காசு தேடி யீயாமல் வாழப் ...... பெறுவோரும்**
**மாதுபாகர் வாழ்வே யெனாநெக் ...... குருகாரும்**
**மாறி லாத மாகால னூர்புக் ...... கலைவாரே**
**நாத ரூப மாநாத ராகத் ...... துறைவோனே**
**நாக லோக மீரேழு பாருக் ...... குரியோனே**
**தீதி லாத வேல்வீர சேவற் ...... கொடியோனே**
**தேவ தேவ தேவாதி தேவப் ...... பெருமாளே.**

## 1040 நாராலே தோல் (பொதுப்பாடல்கள்)

தானா தானா தானா தானா
தானா தானத் ...... தனதான

**நாரா லேதோல் நீரா லேயாம்**
**நானா வாசற் ...... குடிலூடே**
**ஞாதா வாயே வாழ்கா லேகாய்**
**நாய்பேய் சூழ்கைக் ...... கிடமாமுன்**
**தாரா ரார்தோ ளீரா றானே**
**சார்வா னோர்நற் ...... பெருவாழ்வே**
**தாழா தேநா யேனா வாலே**
**தாள்பா டாண்மைத் ...... திறல்தாராய்**
**பாரே ழோர்தா ளாலே யாள்வோர்**
**பாவார்வேதத் ...... தயனாரும்**
**பாழு டேவா னூடே பாரூ**
**டேயூர் பாதத் ...... தினைநாடாச்**
**சீரார் மாதோ டேவாழ் வார்நீள்**
**சேவூர் வார்பொற் ...... சடையீசர்**
**சேயே வேளே பூவே கோவே**
**தேவே தேவப் ...... பெருமாளே.**

## 1041 மாதா வோடே (பொதுப்பாடல்கள்)

தானா தானா தானா தானா
தானா தானத் ...... தனதான

**மாதா வோடே மாமா னானோர்**
**மாதோ டேமைத் ...... துனமாரும்**
**மாறா னார்போ னீள்தீ யூடே**
**மாயா மோகக் ...... குடில்போடாப்**
**போதா நீரூ டேபோய் மூழ்கா**

வீழ்கா வேதைக் ...... குயிர்போமுன்
போதா காரா பாராய் சீரார்
போதார் பாதத் ...... தருள்தாராய்
வேதா வோடே மாலா னார்மேல்
வானோர் மேனிப் ...... பயமீள
வேதா னோர்மே லாகா தேயோர்
வேலால் வேதித் ...... திடும்வீரா
தீதார் தீயார் தீயு டேமூள்
சேரா சேதித் ...... திடுவோர்தஞ்
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் ...... பெருமாளே.

## 1045 அமல வாயு (பொதுப்பாடல்கள்)

தனன தான தானான தனன தான தானான
தனன தான தானான தனதான ......

அமல வாயு வோடாத கமல நாபி மேல்மூல
அமுத பான மேமூல ...... அனல்மூள
அசைவு றாது பேராத விதமு மேவி யோவாது
அரிச தான சோபான ...... மதனாலே
எமனை மோதி யாகாச கமன மாம னோபாவ
மெளிது சால மேலாக ...... வுரையாடும்
எனதி யானும் வேறாகி எவரும் யாதும் யானாகும்
இதய பாவ னாதீத ...... மருள்வாயே
விமலை தோடி மீதோடு யமுனை போல வோரேழு
விபுத மேக மேபோல ...... வுலகேழும்
விரிவு காணு மாமாயன் முடிய நீளு மாபோல
வெகுவி தாமு காகாய ...... பதமோடிக்
கமல யோனி வீடான ககன கோள மீதோடு
கலப நீல மாயூர ...... இளையோனே
கருணை மேக மேதூய கருணை வாரி யேயீறில்
கருணை மேரு வேதேவர் ...... பெருமாளே.

## 1053 அதல சேடனாராட (பொதுப்பாடல்கள்)

தனன தான தானான தனன தான தானான
தனன தான தானான தனதான ......

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட ...... அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள ...... மவையாட

மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
   மருவு வானு ளோராட ...... மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
   மயிலு மாடி நீயாடி ...... வரவேணும்
கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
   கருத லார்கள் மாசேனை ...... பொடியாகக்
கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது
   கனக வேத கோடூதி ...... அலைமோதும்
உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
   உவண மூர்தி மாமாயன் ...... மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
   னுளமு மாட வாழ்தேவர் ...... பெருமாளே.

## 1177 புகரில் சேவல (பொதுப்பாடல்கள்)

தனன தானன தந்தன தந்தன
   தனன தானன தந்தன தந்தன
      தனன தானன தந்தன தந்தன ...... தனதான

புகரில் சேவல தந்துர சங்க்ரம
   நிருதர் கோபக்ர வுஞ்சநெ டுங்கிரி
      பொருத சேவக குன்றவர் பெண்கொடி ...... மணவாளா
புனித பூசுர ருஞ்சுர ரும்பணி
   புயச பூதர என்றிரு கண்புனல்
      பொழிய மீமிசை யன்புது ளும்பிய ...... மனனாகி
அகில பூதவு டம்புமு டம்பினில்
   மருவு மாருயி ருங்கர ணங்களு
      மவிழ யானுமி ழந்தஇ டந்தனி ...... லுணர்வாலே
அகில வாதிக ளுஞ்சம யங்களும்
   அடைய ஆமென அன்றென நின்றதை
      யறிவி லேனறி யும்படி யின்றருள் ...... புரிவாயே
மகர கேதன முந்திகழ் செந்தமிழ்
   மலய மாருத மும்பல வெம்பரி
      மளசி லீமுக மும்பல மஞ்சரி ...... வெறியாடும்
மதுக ராரம்வி குஞ்சணி யுங்கர
   மதுர கார்முக மும்பொர வந்தெழு
      மதன ராஜனை வெந்துவி ழும்படி ...... முனிபால
முகிழ்வி லோசன ரஞ்சிறு திங்களு
   முதுப கீரதி யும்புனை யுஞ்சடை
      முடியர் வேதமு நின்றும ணங்கமழ் ...... அபிராமி

முகர நூபுர பங்கய சங்கரி
கிரிகு மாரித்ரி யம்பகி தந்தருள்
முருக னேசுர குஞ்சரி ரஞ்சித ...... பெருமாளே.

## 1250 தீ ஊதை தாத்ரி (பொதுப்பாடல்கள்)

தானான தாத்த தானான தாத்த
தானான தாத்த ...... தனதான

தீயூதை தாத்ரி பானீய மேற்ற
வானீதி யாற்றி ...... கழுமாசைச்
சேறூறு தோற்பை யானாக நோக்கு
மாமாயை தீர்க்க ...... அறியாதே
பேய்பூத மூத்த பாறோரி காக்கை
பீறாஇ ழாத்தி ...... னுடல்பேணிப்
பேயோன டாத்து கோமாளி வாழ்க்கை
போமாறு பேர்த்து ...... னடிதாராய்
வேயூறு சீர்க்கை வேல்வேடர் காட்டி
லேய்வாளை வேட்க ...... வுருமாறி
மீளாது வேட்கை மீதூர வாய்த்த
வேலோடு வேய்த்த ...... இளையோனே
மாயூர வேற்றின் மீதே புகாப்பொன்
மாமேரு வேர்ப்ப ...... றியமோதி
மாறான மாக்கள் நீறாக வோட்டி
வானாடு காத்த ...... பெருமாளே.

## 1291 துள்ளு மதவேள் (பொதுப்பாடல்கள்)

தய்யதன தானத் ...... தனதான

துள்ளுமத வேள்கைக் ...... கணையாலே
தொல்லைநெடு நீலக் ...... கடலாலே
மெள்ளவரு சோலைக் ...... குயிலாலே
மெய்யுருகு மானைத் ...... தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் ...... தெளிவோனே
செய்யகும ரேசத் ...... திறலோனே
வள்ளல்தொழு ஞானக் ...... கழலோனே
வள்ளிமண வாளப் ...... பெருமாளே.

## 1297 பட்டுப் படாத (பொதுப்பாடல்கள்)

தத்தத் தனான ...... தனதான
முருகா முருகா வேல்முருகா முருகா முருகா வேல்முருகா

பட்டுப் படாத ...... மதனாலும்
பக்கத்து மாதர் ...... வசையாலும்

சுட்டுச் சுடாத ...... நிலவாலும்
துக்கத்தி லாழ்வ ...... தியல்போதான்
தட்டுப் படாத ...... திறல்வீரா
தர்க்கித்த சூரர் ...... குலகாலா
மட்டுப் படாத ...... மயிலோனே
மற்றொப்பி லாத ...... பெருமாளே.

## 1306 கும்பகோணம் (க்ஷேத்திரக் கோவை)

தந்த தானன தானான தந்தன
தந்த தானன தானான தந்தன
தந்த தானன தானான தந்தன தனதான ......

கும்ப கோணமொ டாரூர் சிதம்பரம்
உம்பர் வாழ்வுறு சீகாழி நின்றிடு
கொன்றை வேணியர் மாயூர மம்பெறு சிவகாசி ......
கொந்து லாவிய ராமே சுரந்தனி
வந்து பூஜைசெய் நால்வேத தந்திரர்
கும்பு கூடிய வேளூர் பரங்கிரி தனில்வாழ்வே ......
செம்பு கேசுர மாடானை யின்புறு
செந்தி லேடகம் வாழ்சோலை யங்கிரி
தென்றன் மாகிரி நாடாள வந்தவ செகநாதஞ் ......
செஞ்சொ லேரக மாவா வினன்குடி
குன்று தோறுடன் மூதூர் விரிஞ்சைநல்
செம்பொன் மேனிய சோணாடு வஞ்சியில் வருதேவே ......
கம்பை மாவடி மீதேய சுந்தர
கம்பு லாவிய காவேரி சங்கமு
கஞ்சி ராமலை வாழ்தேவ தந்திர வயலூரா ......
கந்த மேவிய போரூர் நடம்புரி
தென்சி வாயமு மேயா யகம்படு
கண்டி யூர்வரு சாமீக டம்பணி மணிமார்பா ......
எம்பி ரானொடு வாதாடு மங்கையர்
உம்பர் வாணிபொ னீள்மால் சவுந்தரி
எந்த நாள்தொறு மேர்பாக நின்றுறு துதியோதும் ......
இந்தி ராணிதன் மாதோடு நன்குற
மங்கை மானையு மாலாய்ம ணந்துல
கெங்கு மேவிய தேவால யந்தொறு .பெருமாளே ......

## 1307 அகரமுமாகி (பழமுதிர்ச்சோலை)

தனதன தான தனதன தான தனதன தான தனதான ......
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி ...... வரவேணும்
https://www.youtube.com/watch?v=t3oUHPIl_FA

அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி ...... அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி ...... அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி யினிமையு மாகி ...... வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி ...... வரவேணும்
மகபதி யாகி மருவும் வலாரி மகிழ்களி கூரும் ...... வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம ...... முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு ...... மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு ...... பெருமாளே.

## 1315 சீர் சிறக்கும் மேனி (பழமுதிர்ச்சோலை)

தானதத்த தான தனாதனா தன
தானதத்த தான தனாதனா தன
தானதத்த தான தனாதனா தன ......தனதானா

சீர்சிறக்கு மேனி பசேல் பசே லென
நூபுரத்தி னோசை கலீர் கலீ ரென
சேரவிட்ட தாள்கள் சிவேல் சிவே லென ...... வருமானார்
சேகரத்தின் வாலை சிலோர் சிலோர் களு
நூறுலக்ஷ கோடி மயால் மயால் கொடு
தேடியொக்க வாடி யையோ வையோ வென ...... மடமாதர்
மார்படைத்த கோடு பளீர் பளீ ரென
ஏமலித்தெ னாவி பகீர் பகீ ரென
மாமசக்கி லாசை யுளோ முளோ மென ...... நினைவோடி
வாடைபற்று வேளை யடா வடா வென
நீமயக்க மேது சொலாய் சொலா யென
வாரம்வைத்த பாத மிதோ இதோ என ...... அருள்வாயே
பாரதத்தை மேரு வெளீ வெளீ திகழ்
கோடொடித்த நாளில் வரைஇ வரைஇ பவர்
பானிறக்க ணேசர் குவா குவா கனர் ...... இளையோனே
பாடல்முக்ய மாது தமீழ் தமீ ழிறை
மாமுநிக்கு காதி லுணார் வுணார் விடு
பாசமற்ற வேத குரூ குரூ பர ...... குமரேசா
போர்மிகுத்த சூரன் விடோம் விடோ மென
நேரெதிர்க்க வேலை படீர் படீ ரென
போயறுத்த போது குபீர் குபீ ரென ...... வெகுசோரி
பூமியுக்க வீசு குகா குகா திகழ்
சோலைவெற்பின் மேவு தெய்வா தெய்வா னைதொள்
பூணியிச்சை யாறு புயா புயா றுள ...... பெருமாளே.

## 1318 வாதினை அடர்ந்த (பழமுதிர்ச்சோலை)

தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தனதான ......

வாதினை யடர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயமதொ ழிந்து ...... தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபதம ணிந்து ...... பணியேனே
ஆதியொடு மந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று ...... தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப ...... தறியேனே
நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானிலம லைந்து ...... திரிவேனே
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று ...... தொழுகேனே
சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற
சோகமது தந்து ...... எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற ...... பெருமாளே

## வேல் விருத்தம் 10 - வலாரியல லாகுலமி

வலாரியல லாகுலமி லாதகல வேகரிய
மாலறியு நாலு மறைநூல்
வலானலை விலானசி விலான்மலை விலானிவர்
மநோலய உலாசம் உறவே
உலாவரு கலோலம கராலய சலங்களும்
உலோகநிலை நீர்நிலையிலா
வொலாவொலி நிசாசரர் உலோகம தெலாமழல்
உலாவிய நிலாவு கொலைவேல்
சிலாவட கலாவிநொ தவாசிலி முகாவிலொச
னாசின சிலாத ணிவிலா
சிலாமலர் எலாமதிய மோதமதி சேலொழிய
சேவக சராப முகிலாம்
விலாசகலி யாணகலை சேரபசு மேலைமுலை
மேவிய விலாச அகலன்
விலாழியி னிலாழியகல் வானில்அனல் ஆரவிடு
வேழம்இளை ஞன்கை வேலே.

## 1328 மங்களம் - ஏறுமயில் ஏறி(திருவருணை)

**ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே**
**ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே**
**கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே**
**குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே**
**மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே**
**வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே**
**ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்**
**ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.**